Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 333 ஆனி. June.2024

Orientalisch
Textilien &
Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
30TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

## பொன்னும், மணியும், பவளமும் கண்ட வெற்றிமணி!
## இன்று யேர்மனியில் 30 ஆண்டுகள் கடந்து ஒலிக்கிறது

### ரஷ்ய- உக்ரைன் போர் முனைகளில் கூலிப்படைகளாக சிங்கள ராணுவம்!

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



### தொலைத்த இடத்தில் தேடுதல்

பேராசிரியர்.சி.மௌனகுரு (இலங்கை)

30 years




Dr.IN

இதழ்: 333




# நான் போத்துகீசு மொழியில் பேசுகிறேன் அது உங்களுக்கும் புரியும்





**வீட்டில் நாம் தமிழ் பேசாது விட்டாலே தமிழ் அழியும்.**



● மாதவி

போத்துக்கல்லில் இன்று (11.05 2024) நான் தங்கிய விடுதியில் (அலுமாரி) க்குள் உடுப்புகள் வைத்தேன், (குசினி) யும், இருந்தது, (பிக்கானுடன், அலவாங்குடன்) தெருவில் பலர் (கக்கூசு) குழாய் நிலத்துள் பதிக்கும் வேலை செய்வதை (யன்னல்) வழியாகப்பார்த்தேன்.

அங்கே சத்தத்துடன் ஒரு வாகனம் (ஆசுபத்திரி க்கு) நோயாளி யை அழைத்துப் போனது. (கதிரையில்) இருந்து (மேசையில்,) (பீங்கான்) கோப்பையில் இருந்த (பாண்) அதனை எடுத்து உண்டேன். (போத்தல்) தண்ணீரை மடமட எனக்குடித்தேன். சரியான வெய்யில் (சப்பாத்தை) கழட்டிவிட்டு, முகத்தை (துவாய்) எடுத்து, துடைத்தேன்.

இவ்வளவும் உங்களுடன் போத்துகீச மொழியில் பேசினேன் புரிந்து விட்டதே உங்களுக்கு. நாளை யேர்மன், பிரஞ், என பல மொழிகளில் பேசுவேன். உங்களுக்கு நிச்சயம் புரியும். தமிழில் இவ்வளவு போதுக்கீச மொழிக் கலப்பு. இது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, எல்லா மொழிகளிலும் மொழிக் கலப்புகள் கலக்கவே செய்கின்றன. இதனால் தமிழ் அழியும் என எண்ணிவிடாதீர்கள்.

பி. குறிப்பு : 1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசு போத்துக்கீசரிடம் வீழ்ச்சியடைந்தபோது யாழ்ப்பாணத்தில் போத்துக்கீசர் ஆட்சி உருவானது.

இவ்வாண்டிலேயே போத்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் ஆட்சியைத் தங்கள் நேரடி ஆட்சிக்குள் கொண்டுவந்தபோதும், 1590 ஆம் ஆண்டிலிருந்தே போத்துக்கீசர் செல்வாக்குக்கு உட்பட்டே யாழ்ப்பாண அரசர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் யாழ்ப்பாண அரசின் தலைநகரை நல்லூரிலிருந்து இன்றைய யாழ்ப்பாண நகருக்கு மாற்றினர்.


யாழ்ப்பாணத்தில் ஒரு கோட்டையையும் கட்டி அதற்கு வெளியே இன்று பறங்கித் தெரு என அழைக்கப்படும் பகுதியில் ஒரு நகரத்தையும் அமைத்தார்கள். போத் துக்கீசு சொற்கள் வேறு இருந்தால், அறியத்தரலாம். இதில் அடைப்புக்குறிப்பில் உள்ள போத்துக்கீசு சொல் தவறு இருந்தால் சுட்டிக்காட்டலாம். நன்றி






**30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்**

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 333



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# ரஷ்ய – உக்ரைன் போர் முனைகளில் கூலிப்படைகளாக சிங்கள ராணுவம்!



இலங்கையிலிருந்து
**ஆர்.பாரதி**

ரஷ்ய - உக்ரைன் யுத்தம் உலகம் முழுவதிலுமிருந்து கூலிப்படைகளை ஈர்த்துள்ளது. இரு நாடுகளிலுமே போரிடும் படையினருக்குத் தட்டுப்பாடு. கணிசமான தொகையைக் கொடுத்து வெளிநாடுகளிலிருந்து கூலிப்படைகளாக இராணுவத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்றார்கள். இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமைகள், இராணுவ விட்டோடிகளின் தொகை அதிகரித்திருப்பது என்பன இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் முகவர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையிலிருந்து கணிசமான எண்ணிக்கையிலான முன்னாள் ராணுவ வீரர்கள் மோதலின் இரு தரப்பிலும் இணைந்துள்ளார்கள். போர் முனையில் குறைந்தது 16 இலங்கைப் படையினர் பலியாகியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு டிருக்கின்றார்கள். இதில் படையினருடன் சம்பந்தப்பட்ட சிலரும் இருக்கின்றார்கள் என்பது அதிர்ச்சியான தகவல். வேலை வாய்ப்பு என பொதுவாகச் சொல்லப்பட்டே இவா்கள் அனுப்பப்படுவதாகவும், ரஷ்யா அல்லது உக்ரைனுக்குச் சென்ற பின்னரே ராணுவத்தில்தான் வேலை என்பது அவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

பொருளாதார செருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில் 12 - 13 இலட்சம் வரையிலான மாத வேதனம் என முகவர்கள் அழைக்கும் போது, வீடுகளில் முடங்கிக் கிடக்கும் முன்னாள் படையினா் அல்லது படை - விட்டோடிகள் அதனால் கவரப்படுவதில் வியப்பில்லை. ஆனால், எவ்வளவு பேர் போர் முனைக்குச் சென்றார்கள் என்பதற்கான தகவல் திட்டவட்டமாகத் தல்ல. பலர் 55 வயதுக்கு முன்னரே ஓய்வுபெற்றவர்கள். ராணுவப் பயிற்சி மற்றும் அனுபவம் அவர்களுக்கு இருக்கின்றது. சிவில் துறையில் வேலையின்மை அல்லது குறைந்த சம்பளத்தில் வேலை வாய்ப்பை எதிர்கொள்கின்றனர். இந்த பொருளாதார விரக்தியானது வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களால் வழங்கப்படும் அதிக சம்பளம் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கான வாக்குறுதிகளுக்கு அவா்கள் கவரப்படுகின்றார்கள்.

படைகளிலிருந்து இடைவிலகிய பல ஆயிரக்கணக்கானவர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்பவில்லை. அவர்களில் சிலா் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றார்கள். பாதாள உலகக் குழுக்களிலும் சிலர் இணைந்திருக்கின்றார்கள். இதனால், அவர்களில் சிலர் தேடப்படுபவர்களாகவும் உள்ளார்கள். இவ்வாறான சிலர் வேலை வாய்ப்பு முகவா்கள் மூலமாக வெளிநாடு சென்றுள்ளார்கள். அவ்வாறானவா்களில் கணிசமான தொகையினர் கவர்ச்சிகரமான சம்பளத்துக்காக ரஷ்ய - உக்ரைன் படைகளில் இணைந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.



உத்தியோகபுர்வமாக கடந்த வாரம் தெரிவித்தது. ஆனால், இந்த எண்ணிக்கை 200 ஐ தாண்டும் என போா் முனையிலிருந்து மீண்டு வந்த ராணுவ அதிகாரி ஒருவா் கூறியிருக்கின்றார். சுமார் ஆயிரம் வரையிலான இலங்கையர் கள் இரு தரப்பு ராணுவத்திலும் கூலிப்படைகளாக இணைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசியலில் இந்தச் செய்திகள் புயலைக் கிளப்பியிருக்கின்றது. எதிரணியினரின் கேள்விகளைத் தொடர்ந்து முன்னாள் படையினரை யுத்த களத்துக்கு அனுப்பிவைத்த சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவல் உறுதியாகத் தெரியவில்லை. நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காக உயர் மட்டக்குழு ஒன்று இலங்கை அரசாங்கத்தினால் ரஷ்யாவுக்கு அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது.

## பின்னணிக் காரணங்கள்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவான பொருளாதார நெருக்கடி முன்னாள் படையினரையும் விட்டுவைக்கவில்லை. அவர்களுக்கு கவர்ச்சிகரமான ஓய்வுதியம், வசதிகள் என்பன வழங்கப்படுகின்றபோதிலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஈடுசெய்ய அது போதிய

## சமூக ஊடக ஆட்சேர்ப்பு

இலங்கையின் முன்னாள் சிப்பாய்களின் ஆட்சேர்ப்பு முதன்மையாக வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடக தளங்கள் ஊடாக நடைபெறுவதாகத் தெரிகிறது. இந்த தளங்கள் விளம்பரங்கள் மற்றும் மெசேஜ்கள்

18 ஆம் பக்கம் பார்க்க...





INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2024
06.09.2024
FR. 16:00 - 00:00
07.09.2024
SA. 11:00 - 00:00
08.09.2024
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
Stadtteil-Schule
VKII RUHRBEZIRK e.V.
SIVAN DIGITAL
TKD
VMDO
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
PAARPOM
எம்தமிழ்
tamil nrw
MTV
STS தமிழ் TV
0151633 633 33 | 0157 370 50 110 | 176 246 371 75 | 0151 279 909 90

# போன்னும், மணியும், பவளமும் கண்ட வெற்றிமணி! இன்று யேர்மனியில் 30 ஆண்டுகள் கடந்து ஒலிக்கிறது




**இலங்கையில் 1950 இல் ஆரம்பித்து, பொன் விழா, மணிவிழா, பவளவிழா, என மூன்றும் கண்ட வெற்றிமணி!**





வெற்றிமணி இலங்கையில் 1950 ஆம் ஆண்டு நாவலப்பிட்டி நகரில் அதிபர் மு.க சுப்பிரமணியம் அவர்களால் சிறுவர் மாத சஞ்சிகையாக ஆரம்பிக்கப் பட்டது.

அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் மகனாகிய நான் யேர்மனியில் 1994 ஆம் ஆண்டு ஆனிமாதம் வெற்றிமணி பத்திரிகையாக மீண்டும் ஆரம்பித்தேன். 2000 ஆம் ஆண்டு வெற்றிமணி எனது தந்தையார் இலங்கையில் ஆரம்பித்து 50 வருட நிறைவை யேர்மனியில் பொன் விழாவாகக் கொண்டாடினோம். அவ்விழாவில் வெற்றிமணி ஸ்தாபகரின் மனைவியும் எனது தாயாருமான அமரர் நவநிதி சுப்பிரமணியம் அவர்கள் இலங்கையில் இருந்து வந்து விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

அவர் தன் உரையில் தன் கணவர் வெற்றிமணி என்னும் மணியான விதையை நல்ல இடத்தில், நல்ல நோக்கில் விதைத்தமையால் இன்று கடல் கடந்து பொன் விழாக் காண்கின்றது என்று கூறினார்.

பேச்சை இடை நிறுத்திச் சிறு மூச்சு விட்டு "எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா" என்று கேட்டார். 80 வயது தொண்டை காய்ந்து விட்டது. தண்ணீர் குடித்துவிட்டுத் தெளிவாகச் சில வார்த்தைகள் சொன்னார். அவை வார்த்தைகள் அல்ல மந்திரம்.

வெற்றிமணி பத்திரிகை வளர்ச்சிக்கு உதவும் வாசகர்களுக்கும், படைப்பாளிகளுக்கும், அனுசரனை வழங்கும் வியாபார நிறுவனங்கள் அனைத்துக்கும் நன்றி கூறினார். தன் மகனுக்கு நீங்கள் தரும் இந்த ஆதரவு மகத்தானது, நீங்கள் இதனைத் தொடர்ந்து செய்வீர்களானால் வெற்றிமணி உங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒலிக்கும் என்றார். இன்று வரை உங்கள் ஆதரவு தொடர்கின்றது. ஒரு தாயின் வேண்டுதலைப் பிள்ளைகள் தலைமேல் கொண்டு வெற்றிமணியை 30 ஆண்டுகள் ஒலிக்க உதவியுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் வெற்றிமணியின் அன்னையாக இருந்து நன்றி கூறுகிறேன். பெற்றோரின் ஆசியும், உங்கள் நேசமும் இருப்பதால் வெற்றிமணி இலங்கையில் ஆரம்பித்துத் தை 2025 இல் வைர விழாவையும் காண்கிறது. என்ற மகிழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அத்துடன் என் வாழ்வில் வெற்றிமணி, பொன் விழா, மணிவிழா, பவள விழா என மூன்றையும் காணவைக்கிறது. இது பெரும் பேறல்லவா! என் பெற்றோருக்கும், உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும், எனது நன்றி.

**என்றும் தமிழுடன்**
**மு.க.சு.சிவகுமாரன்**
**(வெற்றிமணி பிரதம ஆசிரியர்**
**யேர்மனி. 01.06.2024)**

# தாய் மண்ணில் 'வெற்றி நிலா முற்றம்'

## வெற்றிமணி 30ஆம் ஆண்டு நிறைவு விழா

**காலம்:** 06.07.2024 சனிக்கிழமை
**இடம்:** ராஜாராணி சேவை இல்லம், பருத்தித்துறை.
(Raja Rani Centre 4th Cross Street Point Pedro)
**நேரம்:** மாலை 3.00 மணி முதல் 6.30 மணி வரை.



**தலைமை:**
**ஊடகவியலாளர்**
**பாரதி இராசநாயகம்**
**அவர்கள்**

**பிரதம விருந்தினர்கள்:**



பேராசிரியர் அ.சண்முகதாஸ்,
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

**வரவேற்புரை:** வெற்றிமணி திரு.மு.க.சு.சிவகுமாரன்

**சிறப்புரைகள்.**

Dr.கே.முருகானந்தன்
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்
(முன்னாள் யாழ் வெற்றிமணி ஆசிரியர்)
கவிஞர் வ.வடிவழகையன்.

**நிகழ்ச்சிகள்:**
"வெற்றிமணியும் யேர்மனியும்
30 வருட அனுபவப்பகிர்வு"

திரு.மு.க.சு.சிவகுமாரன் (வெற்றிமணி பிரதம ஆசிரியர் யேர்மனி)

**கரிணி கண்ணன் அவர்களின் 'வைகல்" நூல் அறிமுகம்**
(வெற்றிமணி வெளியீடு-28)

குறும்படங்கள். தயாரிப்பு வெற்றிமணி.

**"எழுதாத கவிதைக்கு முதல் பரிசு "**
(பருத்தித்துறையில் படமாக்கப்பட்டது)
**"தம்பட்டம்"**
(யேர்மனியில் தமிழர் தெருவிழாவில் படமாக்கப்பட்டது)

**நன்றியுரை:** யோ.சாந்தி
(விழா ஏற்பாட்டாளர், வெற்றிமணி சர்வதேச பரப்பு செயற்பாட்டாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**






**30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்**


Luckyfly
SUMMER
OFFER
MAY OFFER
799€
ஸ்ரீலங்கா சென்றுவர
குறைந்த விலையில் மகிழ்ச்சியாக
செல்ல...
நீங்கள் விரும்பிய
நாட்களில் சுற்றுலா செல்ல
டிக்கெட் வசதி
செய்து தருகிறோம்...
இன்றே அழையுங்கள்!
COLOMBO TO JAFFNA
49€
TRANSPORT CHARGES
BOOK ON CALL
info@lucky-fly.de
www.lucky-fly.de
0234 2399032
0179 14 84892



# ட்ரெண்டாகும் விவாகரத்துகள்!



பிரியா இராமநாதன்
(இலங்கை)

விவாகரத்தைக் கொண்டாடும் விதமாக போட்டோஷூட் எடுத்து சமூக வலைதளங்களில் வைரலாக்குவது, விவாகரத்தினை அறிவித்துவிட்டு நாங்கள் தொடர்ந்தும் நண்பர்களாகவே இருப்போம் என மிகவும் கேசுவலாக கூறுவது, குறட்டை விட்டால்கூட விவாகரத்து கேட்டு கோர்ட் வாசல் ஏறுவது என தற்போது விவாகரத்து எனும் திருமண முறிவு மிக மிக சகஜமாகிக்கொண்டிருக்கின்றது என்பது நாம் அனைவரும் அறிந்தவொன்றே. ஒரு ஆணோ பெண்ணோ திருமண உறவினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் அந்த திருமண முறிவுகள் கொண்டாடப் படவேண்டியவைதான். ஆனால்? மிகச் சிறிய பிரச்சினைகள், அர்த்தமற்ற காரணங்களால் ஏற்படும் திருமண முறிவுகள் கடந்த தலைமுறையினை அதிர்ச்சிக்குள்ளாக்குவதுடன், இந்த தலைமுறையினரைக் கூட இந்தப் போக்கு சரியானதா? விவாகரத்து என்பது கொண்டாடப்பட வேண்டியதா? அல்லது சகித்துக்கொண்டு வாழ்வதுதான் சரியா? எனப் பல கேள்விகளை உருவாக்கியுள்ளதென்பதே உண்மை.

சினிமா நடிகர்கள் நடிகைகள் விவாகரத்து தினசரிச்செய்தியாக இருப்பதை வைத்துக்கொண்டு இன்று விவாகரத்துக்கள் அதிகரித்துவிட்டன என்ற கோணத்தில் என்சிந்தனை அமையவில்லை.பொதுவாக எமம்மவர் மத்தியில் பேசப்படும், பேசாது அமிழ்ந்திருக்கும் இந்த விவாகரத்துக்கள் பற்றிய கண்ணோட்டமே இது.

உடல் ரீதியான மன ரீதியான துன்புறுத்தல்கள், நிதி நிலைமை, சுதந்திரமாக இருக்க முடியாத நிலை போன்றன விவாகரத்துக்கான முக்கியமான காரணியாக பார்க்கப்படுகிறது. அத்துடன் சமூக ஊடகங்களில் நிறைய விஷயங்களை பார்ப்பதன் மூலம், கிடைத்த வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளாமல் பிறருடைய வாழ்க்கையை நம் வாழ்க்கையுடன் ஒப்பிட்டு பேசுவது, வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளாதது போன்ற காரணங்களும் இல்லாமலில்லை.

முன்பெல்லாம் கணவன் மற்றும் குழந்தைகள் என குறுகிய வட்டத்திற்குள் தனது வாழ்க்கையை வைத்திருக்கும் இல்லத்தரசிகள் அதிகமாக இருப்பார்கள். குடும்பத்தின் மேம்பாட்டிற்கு இல்லத்தரசிகளின் பங்கு முக்கியமாக இருக்கும். அதற்கு பெண்களுக்கான கல்வி குறைந்த அளவில் இருந்தமை மற்றும் பொருளாதார சார்பு நிலை போன்றன காரணமாக அமைந்தது. ஆனால் தற்போது பெண்கள் கல்வியில் மேம்பட்டு தொழில்ரீதியாக முன்னேறிச் செல்லும்போது, ஆண் பெண் மணவாழ்வில் அது சிக்கல்களை இரு தரப்பிலுமே உருவாக்கியுள்ளது என்பதே உண்மை. இதற்கு ஆண்களின் வளர்ப்பு முறை, பெண்களின் அதீத எதிர்பார்ப்பு என்பனவும் காரணம்.

உண்மையில் இப்போதெல்லாம் நமக்கு சகிப்புத்தன்மை குறைந்துவிட்டது. பந்தத்துக்காக வாழ்ந்ததெல்லாம் போதும் என்ற மனநிலை நம்மில் அநேகருக்கு. முன்பெல்லாம் காவல்நிலையத்துக்கோ நீதிமன்றங்களுக்கோ அவ்வளவு எளிதில் போய்விட மாட்டார்கள். குடும்ப கௌரவம் போய்விடும் என நினைப்பார்கள். ஆனால், இப்போது அப்படி அல்ல. காவல்நிலையத்தையும் நீதி மன்றத்தையும் எளிதாக அணுக முடிகிறது. விவாகரத்து என்பது டிரெண்டாகிவிட்டது! முன்பெல்லாம் காதலித்துவிட்டு அந்த காதலில் இருந்து நழுவியோடுவதற்கு ஏதுவாக நாங்கள் நண்பர்களாக இருப்போம் என்றார்கள். ஆனால் இப்போதெல்லாம் விவாகரத்து செய்துவிட்டு நாங்கள் நல்ல நண்பர்களாக பயணத்தினை தொடர்வோம் என்கிறார்கள். நட்பு என்ற உறவுக்கு கட்டுப்பாடுகள் ஏதும் இல்லாத காரணம்தான் நண்பர்களை நாம் அதிகமாக விரும்புவதன் உளவியல் காரணி அல்லவா? கணவன் மனைவி என்ற உறவின் நிர்ப்பந்தம் தான் பிரிவுக்கான முக்கியமான காரணி. எதையும் வெளிப்படையாக, அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்ற தயக்கத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்காமல் மனதில் பட்டதையும், விருப்பங்களையும் சகஜமாக வெளிப்படுத்தும் உறவில்தான் சிக்கல்கள் பெரும்பாலும் எழுவதில்லை. ஆனால் கணவன் மனைவியாக இருந்தவர்கள் நண்பர்களாக இருப்போம் என கூறுவது எந்த அளவிற்கு சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே!



விட்டுக்கொடுத்தல்தானே குடும்ப வாழ்க்கை என்று சிலர் சொல்லலாம். உண்மைதான் அதில் மாற்றுக் கருத்து இல்லை. கணவனோ மனைவியோ திருமண உறவில், ஒருவர் மட்டுமே விட்டுக் கொடுத்துக்கொண்டும் எல்லா வற்றையும் பொறுத்துக் கொண்டும் இருந்தால் அங்குதான் பிரச்னை. கணவனும் மனைவியும் சரிசமமாக விட்டுக் கொடுத்து வாழ்ந்தால்தான் பிரச்னை வராது. ஒவ்வொருவரும் தமது இணை மாறவேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். தாமும் மாற வேண்டும் என்று நினைப்பதில்லை. எல்லோருமே நூறு சதவிகிதம் திருப்திகரமாக இணையிடம் நடந்து கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் அடுத்தவரை அவரது குறையுடன் ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உறவு ஓரளவு சீராகச் செல்லும்.

திருமணத்துக்கு ஜாதகம் பார்ப்பதைவிட தாங்கள் திருமணம் செய்துகொள்ளப் போகும் இணையின் மனப்போக்கும், நம் மனப்போக்கும் ஒத்துப் போகுமா என ஆராய்வது மிகவும் முக்கியம். அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பமாக இருந்த காரணத்தால் ஒருவரின் முக வாட்டத்திலேயே பெரியவர்களோ அல்லது மற்றவர்களோ பிரச்சினை

28 ஆம் பக்கம் பார்க்க...



30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்



# செல்வியின் கலையா? கதையா?

## (Empowering women around us)

**ஊசி நூலின் தாள இயக்கத்தில் ஆறுதல் கண்டனர்**

ஒவ்வொரு பெண்ணும் தன்னைச் சுற்றியிருக்கும் தன் போன்றவர்களை மேம்படுத்தல் என்பது ஒரு சமூகத்தின் ஆணி வேரைப் பலப்படுத்துவது போன்றது. அதற்காக ஆண்கள், மூன்றாம் பாலினர், இளம் தலை முறையினரை கவனிக்காமல் விடுதல் என்பதாகாது. எமது ஆசிய இனத்துப் பெண்களும் சரி ஏனைய இனத்தவர்களானாலும் சரி, கணிசமான அளவில் பின் தங்கியிருப்பவர்கள், பெண்களும் பெண்களாக வாழ்கின்ற திருநங்கையர்களும் தாம்.

அண்மையில் தாயகத்தில் பின் தங்கிய மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த செல்வியோடு தொடர்பாடலை ஏற்படுத்த முடிந்த போது, அப்பெண்ணின் தன்னம்பிக்கை, முயற்சி, கடின உழைப்பு, நேரம்ச சிந்தனை என்பன என்னை அசர வைத்தன. செல்வியின் ஒப்புதலோடு அவரது வெற்றிக்கதையை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

தன் துணைவர் தன்னையும், ஆண், பெண் என, தமது இரு குழந்தைகளையும் தனியே விட்டுவிட்டு, நீங்கிய பின்னர் தான் என்ன செய்வதெனத் தெரியாமல் திகைத்துப் போனதாகக் கூறியவர், அதன் பின்னர் இன்னொரு பெண்ணின் வழிகாட்டுதலின் பிரகாரம் ஒரு தையல் வேலைக்கான தற்சார்பு தொண்டு நிறுவனத்திற்கு உதவி செய்ய ஆரம்பித்ததாகக் கூறினார். அங்கு தனக்கு போக்குவரத்துக்கான செலவு, உணவு என்ற இரண்டும் இலவசமாகக் கிடைத்ததில் தான் தொடர்ந்து பல சிக்கல்களுக்கு மத்தியில், அன்றாடம் சில மணிகள் எனச் சில மாதங்களுக்குத் தொடர்ச்சியாக அந்நிறுவனத்தில் வேலை பார்த்ததாகக் கூறினார்.

இவ்வாறு தான் வேலைக்குப் போக ஆரம்பித்த போது பலராலும் தான் ஊதியம் இல்லாது உழைக்கப் போகும் பெண் எனக் கேலிக்காளானதாகத் தெரிவித்தார். இருப்பினும், மனம் தளராது அங்கு போய் வந்ததில், தன் முயற்சி, கடின உழைப்பு போன்றவற்றிற்கான அங்கீகாரம் தான் எதிர்பார்த்திராத பல நன்மைகளை தனக்கு விளைவித்ததாக எடுத்துரைக்கிறார். அவற்றில் சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

தன்னார்வமாகத் தொடங்கிய தையல்களின் கதை, ஒரு பரபரப்பான சமூகத்தின் இதயத்தில், ஆர்வமுள்ள தனிநபர்களின் குழுவாக ஒரு பொதுவான நூலுடன் கூடிப் பலமான விருட்சமாகியது. தையல் தன்னார்வத் திட்ட மாகத் தொடங்கிய ஒரு சிறு பொறி விரைவில், செல்வியைப் போலவே அங்கு சேர்ந்த பெண்களுக்கு வலுவூட்டல் இயக்கமாக மலர்ந்தது.



பூங்கோதை

தன்னம்பிக்கை தளர்ந்த நிலை, படைப்பாற்றல், ஒற்றுமை, குழு முயற்சி ஆகியவற்றின் கதைகளை அந்தப் பொறி ஒன்றாக இணைத்தது. கையில் ஊசியும், நெஞ்சில் உறுதியும் ஏந்தியபடி, தன்னார்வலர்கள் தையல் பயணத்தைத் தொடங்கினர். அந்நிறுவனம் அவர்களுக்குக் வங்கிக் கடன் ஊடக தையல் இயந்திரம் ஒன்றை ஒவ்வொருவருக்கும் பெற்றுக் கொடுக்க, வரும் வருமானத்தில் அப்பெண்கள் தமது கடனை மாதாந்தம் திருப்பி அடைக்க ஆரம்பித்தனர்.

அவர்களின் பணி எளிமையானது ஆனால் ஆழமானது. தையல் கலை மூலம் தனிநபர்களை மேம்படுத்துவது என்ற திட்டத்தின் மூலம் அவர்கள் உள்ளூர் சமூக மையங்களில் பட்டறைகளை அமைத்து, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த அனைத்து தரப்பு மக்களையும் மாற்றும் செயல்பாட்டில் சேர அழைத்தனர். சிலருக்கு, தையல் என்பது கண்டுபிடிக்கப்படுவதற்குக் காத்திருக்கும் ஒரு புதிய திறமையாக இருந்தது. மற்றவர்களுக்கு, இது குழந்தை பருவத்திலிருந்தே நேசத்துக்குரிய நினைவுகளை நினைவூட்டும், அவர்களின் வேர்களுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

அனுபவத்தைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஊசி நூலின் தாள இயக்கத்தில் ஆறுதல் கண்டனர்.

ஒவ்வொரு தையல் தொழிற்பாட்டின் முடிவிலும் செல்வி உட்பட, அவர்கள் அனைவரும் தமக்கு அதிகாரமளிக்கும் ஒரு உணர்வைக் கண்டறிந்தனர். அவர்களின் விரல் நுனியில் துணிகள் உருமாறியதால், சம்பந்தப்பட்டவர்களின் வாழ்க்கையும் மாறியது. இந்தத் திட்டம் சுய வெளிப்பாட்டிற்கான ஒரு தளமாக மாறியது, தனிநபர்கள் தங்கள் படைப்பாற்றலைக் கட்டவிழ்த்துவிடவும், அவர்களின் தனித்துவமான கதைகளை உலகத்துடன் பகிர்ந்து கொள்ளவும் சுதந்திரத்தைக் அளித்தது.

சீருடை முதல் சிக்கலான ஆடைகள் வரை, ஒவ்வொரு படைப்பும் அவர்களது கற்பனை மற்றும் புத்தி கூர்மைக்கு சான்றாக அமைந்தது. தையல் செயலின் மூலம், பங்கேற்பாளர்கள் அர்த்தமுள்ள இணைப்புகளை உருவாக்கி, ஒரு பொதுவான ஆர்வத்தால் பிணைக்கப்பட்ட ஒரு இறுக்கமான சமூகத்தை உருவாக்கினர். இன்று செல்விக்கு மட்டும் நான்கு தையல் இயந்திரங்களும் பத்திற்கும் மேற்பட்ட மூன்றாம் பாலினர்,பெண்கள் என தையல் செயற்பாட்டா ளர்களும் இருக்கின்றனர். வாழ்வு ஒரு புதிய பரிமாணம் அடைகிறது.

அவர்கள் தமக்குக் கிடைத்த வெற்றிகள், தோல்விகள் மூலம் ஒருவரையொருவர் ஆதரித்தனர், ஒருவருக்கொருவர் வெற்றிகளைக் கொண்டாடினர். மற்றும் தேவைப்படும் நேரத்தில் உதவிக் கரங்களை வழங்கினர். நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில், தையல் திட்டம் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக வெளிப்பட்டது. பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் உள்ளார்ந்த வலிமை நெகிழ்ச்சியாகவே இருந்தது. இது ஒரு குறுகிய காலத்தில் பொழுதுபோக்கை விட அவர்கள் வாழ்வினை வளப்படுத்தும் ஒரு செயற்பாடாக மாறியிருந்தது.

திட்டம் தொடர்ந்து வளர்ந்து வருவதால் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்பை அவர்கள் திறமை,முயற்சி, உழைப்பின் அடிப்படையில் வழங்க இருப்பதாக செல்வி கூறியது, அவரைக் கேலி செய்தவர்களின் நாவை அடக்கும் இயந்திரமாக எனக்குத் தோன்றியது.




Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)

30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்

# தேக்கத்திற்கு அப்பால்

தீபா ஶ்ரீதரன் (தாய்வான்)

**அறிமுகம்:** தீபா ஶ்ரீதரன், தூத்துக்குடியில் பிறந்து, திருச்சியில் வளர்ந்தவர். முதுகலை உயிர்தொழில் நுட்பவியல் பட்டதாரி. தற்போது தைவானில் மூலக்கூறு உயிரியல் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளார். எழுத்துப் பயணம் அவருக்குப் பிடித்திருப்பதாகவும் அது அவரின் தனிமனித மேம்பாட்டிற்கு வழிவகுப்பதாகவும் கூறுகிறார்.



நான் பிறந்ததிலிருந்தே ஓர் இடத்தில் பத்து வருடங்களுக்கு மேல் இருந்ததில்லை.அதனாலேயோ என்னவோ எந்த ஊரின் மீதும் எனக்குப் பெரிய பற்றுதல் இருந்ததில்லை. பிறந்த ஊரான தூத்துக்குடியைப் பற்றிய மறக்கமுடியாத பசுமை நினைவுகள் இன்றும் உண்டு. இந்த முறை இந்தியப் பயணத்தின் போது தூத்துக்குடிக்குச் சென்றிருந்தேன். நிறையவே மாறியிருந்தது. 33 வருடங்களுக்கு முன் பார்த்தக் கட்டிடங்களும், மனிதர்களும் காணமல் போயிருந்தது ஒருபுறம் ஏமாற்றத்தைத் தந்தாலும், அந்த மாற்றம் பிடித்திருந்தது. அடுத்தது திருச்சி. உலகம், அரசியல், தனிமனித வாழ்க்கை விழுமியங்கள், கல்வி பற்றிய பிம்பங்கள் தோன்ற ஆரம்பிக்கும் பதின்மப் பருவம், என் வாழ்வின் மிக முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்த இடம். ஆனால் எனக்கு எள்ளளவும் ஒட்டுதல் இல்லாத இடம். அதற்குப் பின் பல இடங்களில் வாழ்ந்திருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் பொற்றோரைச் சந்திக்க அங்கே செல்வதுண்டு. திருச்சிக்குச் செல்லும்போதெல்லாம் எந்த வித உற்சாகமும் இருப்பதில்லை, அப்பா அம்மாவைப் பார்க்கும் தருணங்களைத் தவிர்த்து. திருச்சியைப் பற்றி எழுதுவதற்கு எதுவுமே இருந்ததில்லை. ஒரு தட்டையான உணர்வு.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த அதே ஊர், மக்கள். எந்த விதத்திலும் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளாத ஊர் திருச்சி. அங்கிருக்கும் மக்களுக்கு உலகம் பற்றிய பார்வையே இல்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏன் எதிலும் ஆர்வமற்று இருக்கிறார்கள், ஏன் இந்த ஊர் தன்னிடம் புதிய கதைகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்கின்றது என்ற கேள்விகள் என்னைத் துளைக்கின்றன.

இந்த முறை நான் தங்கியிருந்த ஹோட்டலிலிருந்து வீட்டிற்கு ஆட்டோவில் சென்று வந்துகொண்டிருந்தேன். நான் தங்கியிருந்த ஹோட்டல் திருச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் இருந்தது. என் வீட்டிற்கும், அதற்கும் 7 கிலோமீட்டர் தான் தொலைவு. வீட்டருகில் இருக்கும் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு அந்த ஹோட்டல் இருக்கும் இடம் தெரிந்திருக்கவில்லை. தெரியவில்லை என்றாலும் சரி, அதைக் கூகுல் மேப்பில் போட்டுப் பார்க்கும் ஆர்வம் கூடவா இல்லை.

ஆச்சரியமாக இருந்தது. சலிப்பாகவும். தான் செய்யும் வேலைக்காகக் கூடத் தன்னை முழுமையாகத் தயார்படுத்திக் கொள்ள, மேம்படுத்திக்கொள்ள விரும்பாத மனப்போக்கு எந்த விதத்திலும் என்னை ஈர்ப்பதில்லை.

சென்னை ஆட்டோ ஓட்டுனர்களுடன் நிறையவே உரையாடியிருக்கிறேன். அவர்களிடம் ஒரு துடுக்குத்தனமும், வெளியுலகம் பற்றிய ஆர்வமும் நிறைந்திருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். திருச்சியில் அதற்கான அடையாளமே இல்லை. யாரிடம் பேசினாலும் அவர்கள் அந்த ஊரைப்பற்றிய தன்னிறைவோடு பேசுகிறார்கள். ஓர் ஊர் தன்னை மாற்றிக்கொள்ளாமல், உயர்த்திக் கொள்ளாமல், காலத்தின் வடுவைச் செதுக்கிக்கொள்ளமல் எப்படி இருக்க முடியும் என்று எண்ணி அங்கலாய்த்துப் போகிறேன். பழமையைத் தக்கவைத்துக்கொள்வது அழகுதான். ஆனால் அது மட்டுமே ஓர் ஊரை உலகச் சந்தையில் தக்கவைத்துவிட முடியுமா?

இங்குப் புகழ்பெற்ற பல கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. நிறைய வரலாற்றுத் தடங்கள் உண்டு. இந்த நகரத்தின் உள்கட்டமைப்பை மாற்றியமைக்க வெற்றிடங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. உயிர்சேர்க்கும் காவிரி ஆறு, தமிழ்நாட்டின் மத்திய பகுதி, மண் வளம் என்று செழித்து, கொழு த்து, சோம்பிக் கிடக்கிறது. உச்சிப்பிள்ளையார் நோக்கியத் தெப்பக்குளமாய்த் தேங்கிக் கிடக்கறது திருச்சி. இத்தனையிருந்தும் இந்த ஊரில் இடம்பெயரும் மக்கள் தொகை கணிசமான அளவு இல்லை. ஒரு நகரம் தன்னை இடம்பெயர்வதற்குத் தக்கவாறு மாற்றிக்கொள்வது மிகவும் அவசியமல்லவா. அதுதானே தன்னைப் புதுப்பித்துக்கொள்ள ஒரே வழி. இங்கே நகரம் என்று நான் சொல்வது இங்கிருக்கும் மக்களையும் சேர்த்துதான். மனிதர்கள், மொழி,இலக்கியம், கலை என்று எதுவாகினும், தன்னைப் புதிப்பித்துக்கொள்ளாத எதுவும் எனக்குச் சலிப்பாக இருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்திற்கு எதிர்வினையாகவே அவைகளை நான் பார்க்கிறேன்.

இந்தப் பிரபஞ்சத்தின் பரிணாமத்தில் சுமார் 2 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக, நமது கிரகத்தின் காற்றில் ஆக்ஸிஜன் இருந்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக, இன்று நமக்கு விஷமாகும் மீத்தேன் வாயு பரவி இருந்தது.

அங்கே உருவான முதல் வாழ்க்கை வடிவங்கள் காற்றில்லா நுண்ணிய உயிரினங்கள்,அதாவது அவைகள் உயிர்வாழ ஆக்ஸிஜன் தேவையில்லை.

அவற்றின் செயல்பாடுகள் காற்றில்லா வளர்சிதை மாற்றங்களால் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தன.ஒரு துளி ஆக் சிஜனும் அவைகளுக்கு விஷமாக இருந்தது. அப்படிப்பட்ட பல கோடி நுண்ணுயிர்களையும், தாவரங்களையும் அழித்துவிட்டுத்தான் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்று நாம் பெருமையாகப் பேசிக் கொள்ளும் காடுகளும், மரங்களும் ஆக்சிஜனும், அப்படி வேறு இனத்தின் அழிவின் மீது வெற்றிப்பறை முழங்கி வந்தவைகள்தான். இன்று மனிதர்கள் மரங்களை வெட்டுவதைப்பற்றியும், கட்டிடங்கள் பெருகுவதைப் பற்றியும், AI போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் குறைகூறுவதும், கவலைப்படுவதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. உணவு இல்லாமல் போய்விடும், ஆக்சிஜன் இல்லாமல் போய்விடும் என்று சிலர் ஓலமிடுவதை நினைத்தால் சிரிப்பு வருகிறது. இந்தப் பிரபஞ்சம் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே தான் இருக்கும். அதுதான் அதன் தன்மை. இங்குள்ள உயிருள்ளவையும், அவற்றைச் சுற்றியுள்ள உயிரற்றவையும் ஒன்றுக்கொன்று நிகர் எதிர் இணைகள் (Couterparts) அவை சேர்ந்தே பரிணாமம் கொள்ளும். இயற்கை எந்தத் தடுமாற்றமும் இன்றிதான் தன்னைத்தானே வழி நடத்திக்கொள்கிறது. இங்கேயுள்ள ஒவ்வொரு அணுவும், நம் உடலிலுள்ள ஒவ்வொரு உயிரணுவும் ஒவ்வொரு கணமும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றன.இயற்கையும் இந்தப் பிரபஞ்சமும் ஒருபோதும் நிலையானதாக இருந்ததில்லை. எப்போதுமே சக்தி வாய்ந்த மாறுதல்களுடன் கொந்தளித்துக் கொண்டேயிருக்கின்றன.

தெளிந்த ஓடை என்பது மனிதக் கண்களில் படர்ந்த காணல் நீர். இயற்கைத் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் முட்சக்கரத்தினூடே சுழன்றுகொண்டிருக்கிறது. இங்கே தன்னைப் புதுப்பித்துக்கொள்ளாத எதுவும் பிரபஞ்சத்தை அரவணைத்துக் கொள்ள முடியாதவை. மனிதச் சிந்தனைகளும்,விழுமியங்களும்,நிலைப்பாடுகளும் கூட இதற்கு விலக்கல்ல. புதுப்பித்துக் கொள்ளுதல் மட்டுமே இப்பிரபஞ்சத்தின் சுழற்சிக்கு ஏற்றபடி நாம் நடனமாடி இன்பமெய்த ஒரே வழி.









# வெற்றிமணி இனிதாக என்றும் ஒலிக்கட்டும்

யேர்மனியில் இருந்து வெளியாகும் வெற்றிமணி சஞ்சிகை, இவ்வருடம் ஆனிமாதம் தனது முப்பது ஆண்டு நிறைவை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்கின்றது. ஆசிரியர் திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கும் பத்திரிகையின் மேம்பாட்டுக்குத் துணை நிற்கும் அனைத்து இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த நல்வாழ்த்துகள்.

ஆசிரியரான அவரது தந்தை திரு.மு.க.சுப்ரமணியம் அவர்களால் 1950 ம் ஆண்டில் சிறுவர் சஞ்சிகையாக ஆரம்பித்த “வெற்றிமணி“ யின் வெளியீடு, 1979 வரை வெளிவந்தது.

எனினும் மகன் தந்தைக்காற்றும் பேருதவியாக, தனது புலம்பெயர்வின் பின் இன்றைய வெற்றிமணி பத்திரிகையின் ஆசிரியரான திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்களால் ஜேர்மன் தேசத்தில் 1994ம் ஆண்டு புதிய வனப்புடனும் நவீன கணினித் தொழில் நுட்ப உத்திகளுடனும் மீண்டும் புத்துயிர் பெற்றது.

தமிழக சஞ்சிகைகளை விஞ்சும் வர்ணப் பதிப்பு. இது வெற்றிமணியின் அற்புதமான புனர்ஜென்மம். அவரது எழுத்துத் துறையும் பதிப்புத் துறையும் தொடர்ந்து வளர்ச்சி கண்டது. இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் பலர் இருந்தாலும் , சிலர் படைப்பிலக்கியத்திலும் பதிப்புத் துறையிலும் அறியப் பட்டவர்களாக விரும்பப் பட்டவர்களாக இருக்கின்றனர். அதற்கு அவர்களின் குடும்பப் பின்னணி, படைப்பிலக்கியத் தேர்ச்சி, தனிப்பட்ட பண்புகள் ,வசதி வாய்ப்புகள் காரணமாகலாம்.

அவ்வாறான அதிர்ஷ்டங்கள் அனைத்தும் அமைந்தாலும் அவர்கள் மற்றவர்களின் மதிப்பில் உயர்வதற்கு சில சம்பவங்கள் சில எழுத்து வரிகள் சில நினைவுகள் என்பனவும் காரணமாகலாம். இவை ஒருவரைப் பற்றிய மனக்கணிப்பினை உயர்த்த வல்லன. வெற்றிமணி சஞ்சிகை ஆசிரியரான திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களைப் பற்றிய இவ்வாறான உள்மன ஒலிப்பொன்றை முதலில் கூற விரும்புகிறேன்.

வெற்றிமணியில் எனது முதல் கட்டுரை சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிவந்தது. சர்வதேச மகளிர் தினத்திற்காக ஒரு கட்டுரை 500 சொற்களில் வேண்டுமென்றார். கட்டுரை அதைவிட 300 சொற்கள் அதிகமாகவே இருந்தாலும் முழுமையாக வெளிவந்தது. அதை முழுமையாக பிரசுரம் செய்தமைக்காக நன்றி தெரிவித்த போது கூறினார். ““என்னால் வெட்டி சுருக்கி போட முடியவில்லை. சில கட்டுரையை எழுதியவர் மட்டுமே சுருக்க முடியும். பிறர் சுருக்கினால் உயிர் போய்விடும் “ என.

இந்தப் புரிதலும் உணர்வும் இலக்கியவாதியாக சிவகுமாரன் பால் எனக்கிருந்த மதிப்பினை உயர்த்தியது.

சில மாதங்களின் பின் அவரது மனைவியுடன் தம்பதியாக தாயகத்தில் சந்தித்த போதும் நெடுநாள் பழகியவர் போன்று நட்புடன் பழகி எனது எண்ணத்தை உறுதி செய்தார். அப்போது அவரது வழக்கப்படி



ரஞ்ஜனி சுப்ரமணியம்
(இலங்கை)



“வெற்றிலை தருவது போல“ வெற்றிமணியின் சில பிரதிகள் தரவும் மறக்கவில்லை.

கொழும்பில் தொடர் மாடியில் அமைந்த எமது இல்லத்தின் பல்கனியில் நின்று ஆழகிய நீலக் கடலை ரசித்தபடி “நீங்கள் இங்கை இருந்து இயற்கையை ரசித்தபடி எழுதலாம்“ என்றார். உதயத்தையும் அஸ்தமனத்தையும் ரசிப்பதற்கான ஓரிடம் எனக்கும் பிடித்தமானது என்பதால் அந்த ரசனையும் பிடித்திருந்தது. சிவகுமாரன் ஓவியக்கலைப் பட்டதாரி என்பதால் இயற்கையின் மீதான ஈடுபாடு ஆச்சரியமானதல்ல.

சிவகுமாரன் அவர்களின் முக்கிய படைப்புகளாக 1971 இல் அவரது பத்தொன்பதாவது வயதில் வெளியான “ஒரே ஒரு தெய்வம்“ என்ற குறுநாவலினையும், 1990 இல் சித்திர சிற்ப கண்காட்சி சிறப்பு மலரான “புதிய வடிவங்கள்“ நூலினையும், 2000ம் ஆண்டில் “வெற்றிமணி“ பொன் விழா மலரினையும், 29 வருடங்கள் நீண்ட இடைவெளியின் பின் மாதவி என்ற புனைபெயரில் “இடைவெளி “ என்ற 32 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பினையும் குறிப்பிடலாம்.

2003 இல் மாதவி என்ற புனைபெயரில் ஓவியங்களுக்கு முக்கியத்துவம் தரும் “அது என்பது இதுவா“ , தாய்நில ஏக்கத்தினை விளக்கும் “என் காதல் கிராமத்தின் சாளரம்“ கவிதை நூல் , நிலாமகள் எனும் பெயரில் “தமிழே காதல் “ எனும் குறும்பா வகை கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டார். 2007 இல் , எட்டு உட்பிரிவுகளோடு வெளியான அறிவியல் கட்டுரைத் தொகுப்பான “அதிசய உலா“ மற்றும் 2019 ம் ஆண்டு வெற்றிமணி வெள்ளிவிழா மலர். இவரது படைப்புகளில் மிகக் கனதி வாய்ந்தது என்ற தகவல்களும் அறியக் கிடைத்தன.

அத்துடன் இவரது படைப்புகள் காதல் பிரிவு,மொழிப்பற்று, நாட்டுப் பற்று, பண்பாடு, குழந்தை உளநலம், பெற்றோரியல், தலைமுறை இடைவெளி, புலம்பெயர்வு என்பன சார்ந்து அமைவதாகவும், நம்பகத்தன்மை, நகைச்சுவை நறுக்குத் தெறித்தால் போல் வசனங்கள் என்பவற்றின் கலவையாக அமையுமென்று லண்டனில் வாழும் ஈழத்தமிழரான நூலகர் .என்.செல்வராஜ் அவர்களின் கட்டுரை ஒன்றில் அறியக் கிடைத்தது. உண்மைதான்.

மிக அண்மையில் வாசிக்கக் கிடைத்த சிறுகதையான “அப்பவும், இப்பவும் என் பக்கத்து சீட் அவள்“ இக்கூற்றினை உறுதி செய்கிறது. 1960, 70 களில் அன்றைய காதலின் மென்கோணங்களையும், காதலை வெளிப்படுத்துவதற்கான அக்கால கட்டத்தின் தயக்கங்களையும் மெல்லிசை போல கூறிச் செல்லும் கதை. கதையில் வரும் மாதவியும் , கண்ணனின் காயமும் , கடலை பக்கட்டும், கழற்றிக் கொடுத்த ஊசியும், காதலாகிக் கசிந்த தேவாரமும் , கடவுள் தந்த நிகழ்கால வரமும் மனதைத் தொட்டன.

கணக்கின் விடை தெரிந்தவர்களு க்கு, பெண்களின்

II ஆம் பக்கம் பார்க்க...

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்






# மூக்குப் பேணியும் கழுத்து வலியும்

அவர் சொன்னதைக் கேட்ட எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கேட்டிருந்தால் நீங்களும்தான் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள்.

அவர் சொன்னது இவ்வளவு தான், ‘தண்ணி குடிச்சால் தலையைச் சுத்துது’களைச்சால், வெயிலைக்கை அலைஞ்சால், வேர்க்க விறுவிறுக்க வேலை செய்தால், ஏன் ஏதாவது டென்னசல்ஆனால்கூட தண்ணிகுடிக்க வேணும் போலை இருக்கும். குடிக்க சற்று ஆசுவாசமாகவும் தென்பாகவும் இருக்கும்.

ஆனால்இவரோஎதிர்மாறாக,தண்ணி குடிச்சால் தலையைச் சுத்துதாம் என்கிறார்.அவற்றை முகத்தைப் பார்த்தேன்.

அது ஏதோ ஒரு விடயத்தை சிமிக்கிடாமல் எனக்கு செய்தியாக அறிவிப்பது போலிருந்தது.உண்மையில் அவர் உள்ளே வரும்போதே அவற்றை முகத்தை நான் கவனிக்காமல் இல்லை.

அது என்ரை பழக்கம்! நோயாளிகள் உள்ளை வந்து நோயைச் சொல்லு முன்னரே, அவர்கள் நடந்து வரும்போதே, அவர்களுடைய நடை உடை முகபாவம் யாவற்றையும் சட்டென ஒரு பார்வையில் அளவிட்டு விடுவன்.அவர்களுடைய உடல் நிலையை கணக்கில் எடுக்க அது உதவும். ‘தண்ணியை விட்டிட்டு சாராயம் குடிக்கிறது தானே’ எடுக்காகப் பேசுகிற என்ரை பிறவிக் குணம் என்ன சொல்ல வேணும் என யோசிக்க முதலே வாயைத் திறக்க வைச்சிடுத்து.

“அங்கைபோகத் தெரிஞ்சால் நான்



ஏன் இங்கை வாறன்‘அட! இவர் என்னை விட வாய் கிழிஞ்ச வர் போலை கிடக்கு.அது கிடக்கட்டும். தான் குடிக்கிறது இல்லை என்றுதானே சொல்ல வாறார்! என்பது புரிந்தது. எனது கணிப்பு தவறாகப் போனது ஆச்சரியமாக இருந்தது.இவர் குடிக்கிறதில்லையோ என கூட வந்த மகனை ஆச்சரியத்துடன் கேட்டன்.


தகப்பனை ஒரு தடவை சங்கடத்துடன் பார்த்துவிட்டு, எனக்குச் சொன்னார் “குடிச்சவர்தான். இப்ப விட்டிட்டார். சுகமில்லாமல் வந்த பிறகு...“அப்ப நான் நினைச்சு சரிதான். அதைத்த முகமும்



கண்மடல்களும் பானை வயிறும் சரியான செய்தியைத் தந்திருக்கின்றன என்பது புரிந்தது. இதைக் கிண்டிக் கிளறி கேள்வி கேட்டு அவர் மனதை சங்கடப்பட நான் விரும்பவில்லை.

‘தண்ணி குடிச்சால் தலையைச் சுத்துது’ எண்டு சொன்னார் அல்லோ, அதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என யோசித்தேன்.முதற்படியாக கழுத்தை சோதித்துப் பார்த்தேன். மடித்து நிமிர்த்திப் பார்த்ததில் அது இறுக்கமாக இருந்தது. கழுத்து எலுப்புகள் பாதிக்கப்படிருப்பதை உணர முடிந்தது. XRay எடுத்து உறுதிப்படுத்த முடியும். நிச்சயப்படுத்த இன்னொரு கேள்வி!

“இவர் அண்ணாக்காகவோ தண்ணி குடிக்கிறவர்“ மகனைக் கேட்டன். “ஓம் ஐயா அப்படித்தான் குடிக்கிறார். அதுவும் மூக்குப் பேணியிலை தான் குடிக்கிறவர்.“ கழுத்தை பின் பக்கமாக வளைத்துத்தான் மூக்குப் பேணியிலை தண்ணி குடிக்க முடியும். அப்படி வளைக்கும்போது தேய்ந்த கழுத்து எலும்புகள் ஒன்றோடு மற்றது அழுத்தப்படுவதால் தான் வலி அவருக்கு ஏற்படுகிறது.அதைத் தடுக்க சில பயிற்சிகள் சொல்லிக் கொடுத்தேன்.ஓ சுயல எடுத்து உறிதிப்படுத்திய பின்னர் தேவையானால் கழுத்துப் பட்டி Cervical collar கொடுக்கலாம்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

10 ஆம் பக்கத் தொடர்ச்சி... வெற்றிமணி இனிதாக என்றும் ஒலிக்கட்டும்

மனக்கணக்கு மட்டும் அன்று புரியவே இல்லை என்பது சோகம். ஆனால் சிறுகதையில் நாயகியாகவும் புனைபெயரில் மாதவியாகவும் ஆசிரியரைப் பாடாய் படுத்தும் அந்தக் கன்னிகை யார் என்று மனசுக்குள் தீராத கேள்வி. இதே “மாதவி“ 2023 November மாத வெற்றிமணியில் எழுதிய “புன்னகையுடன் என்னைக் கடந்து சென்ற கடவுள்“ பதிவும் பொருள் பொதிந்தது.

வெற்றிமணியில் வெளிவரும் எல்லா ஆக்கங்களையும் வாசிக்க நேரம் அமைவதில்லை.

2023 கார்த்திகை இதழில் வெளிவந்த நான் மிகவும் ரசித்த ஒரு கட்டுரை. ஜனரஞ்ஜகமான அறிவுபூர்வமான அரசியல் கூறும் அங்கதச்சுவை மிகும் கட்டுரை. தலைப்பு: “மச்சான் World Cup இல நாங்க ஸ்ரீலங்காவை சப்போர்ட் பண்ணலாமோ...“ அம்மட்ட சிரி...கடைசிவரை கூடாது“ என ஆரம்பித்து “ஆப்கானிஸ்தான், வெற்றிவேல் வீரவேல் “ என முடியும் இச்சிறு ஆக்கத்தை எழுதியவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜுட் பிரகாஷ். அட்டகாசம். இதற்கு மேல் எழுதினால், வெற்றிமணி ஆசிரியர் இம்முறை பாவம் பார்க்காது கட் பண்ணிப் போடுவார். மீண்டும் சந்திப்போம். நல்வாழ்த்துகள்.

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள் கடல் உணவு வகைகள் அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 , 69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)





# எந்த நேரமும் நின் தனைப் போற்றுவேன்!

## "அமுதூற்றினை யொத்த இதழ்களும்"

## மாதந்தோறும் வெளிவரும் வெற்றிமணி இதழ்கள்

விண்முட்டும் மழை, தரை தொட்டு முத்தமிடும் போது தெறிக்கும் பேரின்ப காட்சியும், நீலக்கடலலை நீராடி மகிழும் எழிலுக்குச் சாளரம் வீசிக் கொண்டிருக்கும் சாலையோர மரக்கிளை இலைகளின் நடனமும், மெல்லத் துளிகள் மேனி தீண்டில், நெஞ்சத்தூறும் தேன் வார்க்கும் கீதமும், எல்லையற்ற ஆசிகளும், ஆனந்தமும் வெள்ளமென வழிந்தோடிக் கொண்டிருக்கும் மழைக்காலத்தில், ரசிப்பதும், வியப்பதும், துய்ப்பதும், தொலைவதும் எனச் சிலரும், சலிப்பதும், சினம் கொள்வதும் , வெறுப்பதும், ஒதுங்குவதும் எனச் சிலரும் இருப்பதுவே மனித இயல்பு. மனித மனங்களை உணர்ந்து செயல்படும் வித்தை மகா வலியது. அச்செயலை முப்பது ஆண்டுகளாய் புலம்பெயர்ந்த நாட்டினில் நிகழ்த்திக் கொண்டிருக்கும் வெற்றிமணிக்கு முதலில் என் அன்பும் நன்றியும் சென்றடைக.

> **"காற்று வெளியிடைக்**
> **கண்ணம்மா, – நின்றன்**
> **காதலை யெண்ணிக் களிக்கின்றேன் "**

காற்று இருந்தால் தான் உயிர் வாழலாம். போயின போயின துன்பங்கள் எனத் துயர் தீர்க்கும் விசாலம் கொண்டது வெளி. காற்று வெளியை இருப்பிடமாகக் கொண்ட வெற்றிமணி, செய்யும் தொழில் மீது காதல் கொண்டு களித்துக் கொண்டிருக்கிறது.

"அமுதூற்றினை யொத்த இதழ்களும்"

மாதந்தோறும் வெளிவரும் வெற்றி மணி இதழ்கள், பல்சுவைக் களஞ்சியமாய் அமுதூற்றினைப் போல இருப்பதனை நான் மட்டுமா அறிவேன்? ஊரே அறியும். வெற்றி மணி வாசகர்கள் நன்கறிவர்.

> **"இந்த வையத்தில் யானுள்ள**
> **மட்டிலும் – எனை**
> **வேற்று நினைவின்றித்**
> **தேற்றியே – இங்கோர்**
> **விண்ணவனாகப் புரியுமே! "**

வைரவிழா காணவிருக்கும் வெற்றிமணியின் நெடும் பயணத்திற்கு, காரணமாக விளங்கும் திரு சிவகுமாரன் ஐயாவிற்கு, ஒற்றை இன்பம் தான் இவ்வையகத்தில். வேறென்ன ? எந்நேரமும் வெற்றிமணி பத்திரிகை பற்றியும், அதில் இடம்பெற வேண்டிய கட்டுரைகளையும் எண்ணி எண்ணி சர்வதேச எழுத்தாளர்களை வெற்றிமணியின் உறவுகளாக ஆக்கிக் கொடுத்திருக்கும் விண்ணவன்.


எந்நேரமும் கற்பனைச் சிறகைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டபடி ,புத்தாக்கங்களைப் பிரசவித்துக் கொண்டிருக்கும் கலைஞனுக்குத் தெரிவதில்லை அவற்றை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியம். இன்றைய ஆவணம் நாளைய ஆய்வாளர்களுக்கு பெரும் சொத்து. இதனை நன்குணர்ந்து செயல்படும் வெற்றிமணி, கடந்த காலச் சொத்துக்களை எதிர்காலத்துக்கு விட்டுச் செல்லும் நிகழ்காலக் கண்ணாடி. முக்காலமுணர்ந்து பணி புரிவோர் காலம் கடந்து போற்றப்படுவர். தேக்கமடையாது, தோழமை கொண்டு தொழில் புரியும் தித்திப்பில் வெற்றிக்கனியைச் சுவைத்துக் கொண்டிருக்கிறது வெற்றிமணி. தமிழ் சஞ்சிகைகள் தரமானவையாக இருந்தாலும், நூறு இதழ்களைக் கடக்கப் போராடும் இக்காலத்தில்,வெற்றிமணி முன்னூறு இதழ்கள் கடந்து மூன்று வருடங்கள் ஆகின்றன என்றால், காதல் இன்றி சாத்தியமில்லை.

> **என்றன் வாயினி லேயமு தூறுதே –**
> **கண்ணம்மா**
> **வென்ற பேர்சொல்லும் போழ்திலே**

வெற்றிமணியைக் கண்ணம்மாவாகக் கொண்டு காதல் புரியும் சிவகுமாரன் ஐயா அவர்கள், வாழ் நாள் சாதனையாளர் விருது பெற்று அண்மையில் லண்டன் மாநகரில் கௌரவிக்கப்பட்டமைக்கு இலங்கையில் இருந்து நாமும் வாழுத்துச் சொல்லி வணங்குகிறோம்.

ஆதலினால், வெற்றிமணிக்காக நாம் இடும் மூலதனம் எவ்வகையாயினும், அது நற்பணிக்கென்று ஆகும். தந்தையின் செயல்ஏந்தித்தொடர்ந்து, வைரவிழா நோக்கி நகரும் வெற்றிமணிக்கு இந்நாள் வரை துணைக்கரம் தந்தோர் அனைவர்க்கும் இப்பிரபஞ்ச சக்தியின் நல்லதிர்வுகள் சென்றடைக.

காற்றுவெளியிடை கனவுகளோடு கரைந்து போகாமல், கனவுகளுக்கெல்லாம் உயிரூட்டிக் கொண்டிருக்கும் பத்திரிகை மனதுக்குள் பதுக்கி வைத்திருக்கும் நம்பிக்கைகளுக்கு கருணை மழை பொழியட்டும் இறை. எழுத்து தெய்வம் எழுதுகோல் தெய்வம் என உய்வித்த பாரதி அருள் நிறையட்டும்.





> ஒரு பத்திரிக்கை ஓராயிரம் கரங்களை
> தழுவக்கூடும்.
> ஒரு மாத இதழ் மதியோடும்,
> மனதோடும் மருவக்கூடும்.
> ஒரு கட்டுரை மறைக்கப்பட்ட மெய்களின்
> வெளிச்சமாகக்கூடும்.
> ஒரு எழுத்து செத்தொழிந்து கிடந்த
> ஒரு மனித வாழ்விற்கு மறுஜென்மம்
> தரக்கூடும்.
> ஆதலினால், எந்த நேரமும் நின்
> தனைப் போற்றுவேன்!



வெற்றி மேல் வெற்றி தொடர
வெற்றிமணிக்கு எமது வாழத்துகள்

யேர்மனியில் ஒரு தமிழ் பத்திரிகை வெளியிடுவது,
என்பது மிகவும், கடினமான
விடயம் என்பதை நாம் அறிவோம்.
இந்தப் பெரும் சேவையை, ஒழுங்காக சிறப்பாக,
வெளியீடு செய்வது, பெரும் சாதனையே.
மிகவும் அழகுடன், 30 வருடங்களாக மக்களை ஈர்க்கும்
வண்ணம்,அழகிய வடிவமைப்புடன்,
வெளிவருகிறது வெற்றிமணி. அதற்கான பெருமை
சிவகுமாரன் அவர்களையே சாரும்.
எமது வாழ்த்துகள்

அன்புடன் கலைவிளக்கு சு.பாக்கியநாதன். யேர்மனி



# மரவெள்ளி

## தமிழர்களைப் போல கூட்டாட்சி மரவெள்ளியருக்கு ஒத்துவராது





ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

“ஐசே… கிழங்கு.. எழும்பும்.. நீர் தான் ஐசே..என்ன முழிக்கிறீர் எழும்பும் ஐசே“,

அருளானந்தம் Block இன் மாடியில் இருந்த எங்களது 11B வகுப்பறையின், பிரதான வீதிப் பக்கம் இருக்கும் வாங்கு வரிசைகளிற்கு இடையால், உடம்பை ஒரு பக்கமாக சரித்து, வேகமாக நடந்து, வகுப் பறையின் முற்பகுதிக்கு வந்து, டக்கென்று திரும்பி, அடுத்த வரிசை வாங்குகளிற்கு நடுவே புகுந்து கொண்டே, பிரபாகரன் மாஸ்டர் உறுமாவார்.

பிரபாகரன் மாஸ்டர் கூப்பிட்ட “கிழங்கு“, உரும்பிராயிலிருந்து பாடசாலைக்கு வரும் நண்பன் நெட்ட நெடுவலான ஆதவன், நடுங்கிக் கொண்டே வாங்கில் இருந்து எழும்புவான். “ஐசே.. பகுதிபட காய்ச்சி வடித்தல்.. சுருக்கமா விளங்கப்படுத்தும்“ பிரபாகரன் மாஸ்டர், ஆதவனிற்கு பக்கத் தில் வந்து நின்று கேள்வியை கேட்க, பக்கத்தில் இருக்கு எங்களுக்கு பதறும். ஆதவன் சயன்ஸ் பாடத்தில் வலு கெட்டிக் காரன், அவன் சரியாக பிரபாகரன் மாஸ்டரின் கேள்விக்கு பதில் சொல்லி விடுவதால் எங்களிடம் அவரின் கேள்வி வராமல் தடுத்து விடுவான். அரிதாக நாங் கள் அன்று பிரபாகரன் மாஸ்டரிடம் அடி வாங்காமல் வீடு போய் சேருவோம்.

தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியான சிவக்குமரன் அவதரி த்த உரும்பிராய் மண்ணிலிருந்து வரும் பிரபாகரன் மாஸ்டரிற்கும், அதே ஊரவ னான ஆதவனிற்கும் இடையிலான இந்த கிழங்கர்கள் ஊடலை எங்களது வகுப்பில் படித்த எவரும் மறந்திருக்க மாட்டார்கள். உரும்பிராய் மண்ணில் தாராளமாக விளையும் மரவெள்ளிக் கிழ ங்கை அடித்தளமாக வை த்தே இந்த “கிழங்கு நாடகம்“ பரி.யோவான் வகுப்பறையில் அரங்கேறும்.

1990 இல் மீண்டும் சண்டை தொடங்க, யாழ்ப்பாணத்தில் இருத்து இடம்பெயர்ந்து, கொழு ம்பில் வாழ்ந்த காலங்களில், தங்க பஸ்பம் போன்ற நிற த்துடன், நல்ல மொறு மொறுப்பாக மரவெள்ளியை பொரித்து, உப்பும் மிளாகா ய்த் தூளும் போட்டுப் பிரட்டித் தந்த ரோட்டோர தள்ளு வண்டில்கா ரனை என்றும் மறக்கேலாது. CIMA படிக்கும் காலங்களில், பம்பலப்பிட்டியில் இருந்து பஸ் பிடித்து வந்து கொழும்பு கோட்டை Telecom office இற்கு முன்னால் இருக்கும் பஸ் தரிப்பிடத்தில் இறங்கும் போது மணி இரவு ஒன்பதை தாண்டியிருக்கும். வத்தளைக்கு வீட்டிற்கு போக அவ்விடத்திலிருந்து புறப்படும் 187 ஜா-எல பஸ் பிடிக்க வேண்டும். வெள்ளை நிற Telecom கட்டிடத்திற்கும், மற்றப் பக்கமிருந்த பழுப்பு நிற YMCA கட்டிடத் திற்கும் இடையில் இருந்த இடைவெளி யடியில் நின்ற சிறிய மரத்திற்கு கீழ் தான், இந்த இரவுநேர மரவெள்ளி பொரியல் தள்ளு வண்டிக்கா ரன் தனது கடையை நடாத்திக் கொண்டிருப்பான்.

தள்ளு வண்டிக்காரனிற்கு சரி பின்னால், உயரமான பரணில், ஆமிக்காரன் ஒரு த்தன் சென்ரிக்கு நிற்பான். 1980 களின் மத்தியில் Tele com கட்டிடத்தை குறிவை த்து ஈரோஸ் இயக்கம் நடா த்திய குண்டுத் தாக்குதலின் விளைவாக, அந்த பிரதேசமே உயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கப்பட்டிருந்தது.

“கொஹமத மல்லி“ என்று அன்பாக விசாரிக்கும் தள்ளு வண்டிக்காரனி டம், பத்துரூபாய்க்கு ஒரு சின்னடியபநிறைய சுடச்சுட மரவெள்ளி பொரியல் வாங்கி, ரோட்டோரம் இருக்கும் இரும்பு தடுப்புச் சுவரில் சாய்ந்து கொண்டே, ஒவ்வொரு உறைப்பு மரவெள்ளிக் கிழங்காக பதறா மல் எடுத்து, வாய்க்குள் போட்டு, மெல்ல மெல்ல சரக் சரக் என கொரித்துக் கொண்டு, இரவையும் நிலவையும் ரசிக்க, பரணிலிருந்து ஆமிக்காரன் பாடும் சிங்களப் பாட்டும் ரசனை மிகுந்ததாகவே இருக்க, அற்புதமான அந்தக் கணங்க ளின் மகிழ்வை, “பாலியகொட-வத்தள, மாபொல்ல.. மாபாகய-கந்தான, ஜா எல-ஜா எல..ஜா எல“ என்ற மினிபஸ் கொந்தாவின் காட்டுக் கத்தல் சிதறடிக்கும்.

கொழும்புத் தள்ளு வண்டிக்காரன் பொரித்த மாதிரி, வீடுகளில் பொரித்த மரவெள்ளி திறமாக அமைவதில்லை. வீடுகளில் பொரிக்கும் மரவெள்ளி சரியான அளவில் பொரி படாததால், ஒன்றில் மிருதுவாக வாழைக்காய் பொரியலைப் போலிருக்கும், இல்லாட்டி அதிகமாக பொரி ந்து கடிக்க கஷ்டப்படும். மரவெள்ளியை இதமா பதமா பொரிப்பது சட்டியில் தங்கி யிருக்கிறதா, பொரிக்கும் எண்ணெயில் தங்கியிருக்கிறதா இல்லை பொரிப் பவரின் கைவண்ணத்தில் தங்கியிரு க்கிறதா என்று இன்னும் சரியாகத் தெரியவில்லை. இந் தியன் ஆமிக்கார ன்களுடனான சண்டைக் காலங்களில் யாழ்ப்பாணமெங்கும் உணவுத்

28 ஆம் பக்கம் பார்க்க...

INDIEN in HEILBRONN யாழ் Festival

கைல்புறோன் நகரில், திறந்த வெளியரங்கில்

யாழ் எழில் கொண்டாட்டம்!

கலை நிகழ்ச்சிகள்
‘Munich தமிழ்ச்சங்கம் வழங்கும்’
நடனம், மயிலாட்டம், ஒயிலாட்டம்
மற்றும் தமிழ்பாரம்பரிய கலாச்சார நிகழ்ச்சிகள்.

(மூன்று தினங்கள்) 07.வெள்ளி, 08.சனி, 09.ஞாயிறு - ஆனி 2024.
இடம்: 74072 Heilbronn Theresienwiese (8,000qm)

‘சுவிஸ் புகழ் மகேஸ்வரன் ஜதீஸ்வர்’
வழங்கும் வீணாகானம்



சுடச் சுட உணவும்! நீங்கள்; விரும்பும் ஆடைகள், மற்றும் மளிகைப்பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் அனைத்தும் கடைகளில் வாங்கலாம்.

அக்னி இசைக்குழுவின்றுடன்
இணைந்து
சூப்பர் சிங்கர் புகழ்
பாலாஜி தேவநாதன் மற்றும் பலர்

சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் உண்டு

Tel: (+49) 01727733873 இந்து கலாச்சார கல்வி மன்றம். Organized by HKB Verein- Heilbronn. Germany

30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்



# வேட்டியில் ஆண்களின் கம்பீரம்



ஏலையா
க.முருகதாசன்

ஊரில் ஆள் பாதி ஆடை பாதி என்ற மூதுரை உண்டு. ஆணாகிலும் பெண்ணாகிலும் அவர்கள் உடுத்தும் உடைகளில் தமது உடலுக்கும் உடல் வாகிற்கும் ஏற்றவாறு உடைகளை உடுத்தினால் அவர்கள் கம்பீரமாகத் தோற்றமளிப்பார்கள்.

தமது நிறத்துக்கு எந்த உடையின் நிறம் பொருத்தமாக இருக்கும் என்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.நிறம் உடலின் பருமன்,உயரம் போன்றவற்றை கவனத்தில் எடுத்து உடைகளை உடுத்துதல் வேண்டும். தமிழர் தமது பண்பாட்டு உடையாக இன்னும் தொடர்ந்து இருப்பது பெண்களுக்கு சீலையும்,ஆண்களுக்கு வேட்டியுந்தான்.திருமணம் செய்யாத இளம் யுவதிகள் பெரும்பாலும் அரைத் தாவணியும் சட்டையும் அணிந்து கொள்வார்கள். தமிழ்ப் பண்பபாட்டு உடைக்குள் சுடிதாரும்,சல்வார் கம்மீசுமகூட புகுந்து விட்டது.

வேட்டி ஆண்களுக்கு கம்பீரமான உடையே தான். வேட்டி உடுத்திருக்கம் ஆண்களுக்கு கம்பீரமான அழகைக் கொடுப்பது வெள்ளை வேட்டி அல்லது பட்டு வேட்டிகளே.

இப்பொழுது நிற வேட்டிகளை ஆண்கள் உடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.ஆனால் வெள்ளைவேட்டி அல்லது பட்டு வேட்டிகள் போல ஆண்களுக்கு கம்பீரத்தைக் கொடுக்காது.

வெளிநாடுகளில் ஏதாவது ஒரு விழாவென்றால் வேட்டி உடுத்திருக்க வேண்டும் என்பதற்காக ஆண்கள் அணிந்திருக்கும் நீளக் காற்சட்டைக்கு மேலாக இரண்டு மீற்றர் வேட்டியயான நாலு முழ வேட்டியை அல்லது எட்டு முழம் என்று சொல்லுகின்ற நாலு மீற்றர் வேட்டியை மடித்துக் கட்டுகிறார்கள்.



வேட்டிகளைச் சரியாக, வேட்டியின் கீழ்ப் பகுதி மேலே கீழே இறங்காமல் ஒழுங்காக கட்ட வேண்டுமென்றால் முதலில் நீளக்காற் சட்டைக்கு மேலாக வேட்டியை மடித்துக் கட்டுவதை நிறுத்த வேண்டும். வேட்டி கட்டுவது கலாச்சாரத்தை மேம்படுத்துவதாக நினைத்துக் கொண்டு ஏதோ வேட்டி கட்டினால் சரி என்பது போலவும் புகைப்படத்துக்காகவுமே வேட்டியைக் கட்டி வருகிறார்கள். வேட்டிகளின் கரைகள் அகலமானதாயும் அகலம் குறைந்தனவாகவும் இருந்து வருகின்றன.

வேட்டி உடுத்துவதில் ஒரு அழகியல் இருக்கின்றது.தாயகத்தில் ஏதாவது குடும்ப நிகழ்வாக இருந்தாலென்ன, பொது விழாவாக இருந்தாலென்ன கோவில் திருவிழாக்களாக இருந்தாலென்ன, நிகழ்வு நடக்கும் இடங்களுக்கு வேட்டி உடுத்துத்தான் போக வேண்டும் என்ற நிலை வரும் போது வீட்டிலிருந்தே வேட்டிகளை உடுத்துக் கொண்டுதான் போவார்கள்.

இரண்டு மீற்றர் வேட்டியாயின் உள்ளாடைக்கு மேலாக இடுப்பிலிருந்து இரண்டு சென்றிமீற்றர் கீழ் வயிற்றுப் பகுதியில் தொப்புளுக்கு கீழே வேட்டித் தலைப்பை பின்பக்கமாக வலது கையால் எடுத்து இடது பக்க தொடைக்கருகிலான பின்பக்க இடுப்பில் அழுத்திப்பிடித்தபடியே இடதுபக்கத் தலைப்பை தொப்புளுக்கு நேரே செருகுதல் வேண்டும்.

வேட்டியின் கீழ்க் கரைகள் ஒன்றுக்கொன்று ஏறி இறங்கி இருக்கக்கக்கூடாது.வேட்டி உடுத்ததன் பின்பு கால்கள் இரண்டையம் அகலமாக வைத்து வேட்டியை தளர்நிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

குறிப்பாக நடக்கும் போது தொடை தெரியாதவண்ணம் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். தொடை தெரிகிறதே என்று அடிக்கடி வேட்டித் தலைப்பால் மறைத்துக் கொண்டிருந்தால் நடையில் உள்ள கம்பீரம் குறைந்துவிடும்.

இதுபோல நாலு மீற்றர் வேட்டியை இடுப்புக்கு மேலாக இரண்டு மீற்றர் உயரத்தில்,ஆரம்பத்தில் இரண்டு மீற்றர் வேட்டி போல இடது இடுப்படியில் வேட்டியின் இடதுபக்கப் பகுதியை செருகிவிட்டு மிகுதி வேட்டியை தொப்புளுக்கு நேர் கீழாக கொண்டு வந்து மடித்துச் செருகிவிட்டு மிகுதி வேட்டியை வலது பக்கமாக கொண்டு போய் பின்பக்காக இடதுபுறம் சுற்றிக் கொண்டு வந்து தலைப்பை தொப்புளுக்கு நேரே வெருகுதல் வேண்டும்.

நாலுமீற்றர் வேட்டியை இடுப்பைச் சற்றி அதிக சுற்றுக்கள் சுற்றுவதால் கீழ்க்கரைகள் ஒரே உயரத்தில் இருக்கத்தக்கதாக பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

வேட்டியின் கீழ்ப்பக்கம் கணுக்காலை மூடியும் பாதத்தைத் தழுவியும், குதிக்காலுக்குக் கீழ் தரையோடு இழுபடாமலும் கட்டுதல் வேண்டும். வேட்டியை உடுத்துக் கொண்டு நடக்கும் போது வேட்டி தடக்குப்படுகிறதே என்று கையால் வேட்டியின் முன்பக்கத்தைத் தூக்கிக் கொண்டு நடப்பது கம்பீரத்தைத் தராது.

இரண்டு சென்ரிமீற்றர் வயிற்றுப் பகுதியையும் சேர்த்துக் கட்டுவதால் வேட்டி இறுக்கமாக நிற்பதற்காகவேயாகும். வேட்டியை உடுத்ததன் பின்பு பிட்டப் பகுதியிலிருந்து கீழ் நோக்னகி தொடைவரை அழுத்திவிடுதல் பிட்டப்பகுதி வேட்டியில் சுரக்கங்களை ஏற்படுத்தாது.

வேட்டி ஆண்களுக்கு அழகானது. அதை ஒழுங்காக,தான் கம்பீரமாக தெரிய வேணும் என்ற இரசிப்புத்தன்மையுடன் கட்ட வேண்டும்.வேட்டிக்கு புஸ்சேர்ட்டே பொருத்தமானது. சட்டையின் கீழ்பகுதி பிட்டத்தின் அரைப்பகுதியை மட்டுமே சுற்றிநிற்றல் வேண்டும்.

உடை எதுவாக இருந்தாலும் உடுத்துவதில் இரசிப்புத்தன்மை இல்லாமலும் ஏதோ இருந்துவிட்டுப் போகட்டும் என்ற சலிப்புடன் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அழகைக் கம்பீரத்தை இரசிக்காதவர்கள் யாருமே இல்லை.



30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்

## 'பிரதி'வாதிகள்!

# ஒரு படைப்பாளி ஒவ்வொரு படைப்பின் முடிவிலும் அவன் வளர்கிறான்

# காப்பியடிப்பவன் வளர்ச்சிக்கு அதுவே முட்டுக்கட்டையாகி விடுகிறது







சேவியர்
(தமிழ்நாடு)

காகம் மிகுந்த கவனத் துடன், உடல் உழைப்பைச் சிந்தி ஒரு கூட்டைக் கட்டும். சில குயில்கள் அதைக் கவனித்துக் கொண்டே இருக்கும். காகம் முட்டையிடும் காலம் வந்தவுடன் முட்டையிடத் துவங்கும்.அவை ஒரு நாள் ஒரு முட்டை எனும் கணக்கில் தான் இடும். காகம் முட்டையிடத் துவங்கியபின் நேரம் பார்த்து, குயில் உள்ளே வந்து காகத்தின் கூட்டில் முட்டையை இட்டு விட்டுச் செல்லும். சற்றேறக் குறைய காகத்தின் முட்டையைப் போலவே குயிலின் முட்டையும் இருக்கும். தனது முட்டைகளில் பிற முட்டைகள் கலந்திருப்பது, காகத்துக்குத் தெரியும். ஆனாலும் அதை உடைக்காது. ஒருவேளை தவறிப் போய், தனது முட்டையையே உடைத்து விடுவோமோ எனும் கவலையில் அது அவற்றை அப்படியே விட்டு விடும்.

குயில்கள் வந்து முட்டையிடாமல் இருப்பதற்காக, காகங்கள் மிகுந்த கவனத்துடன் கூட்டைக் காவல்காக்கும். ஆணும், பெண்ணும் மாறி மாறி. கூட்டைக் காவல் காக்கும். குயில் அந்தப் பக்கம் வந்தால் தாக்கும். சில வேளைகளில் குழுவாக இணைந்து கூட கூட்டைக் காகங்கள் காவல் காக்கும். ஆனாலும், அவற்றையெல்லாம் மீறி குயில் வந்து முட்டையிடும். குஞ்சு பொறிக்கும் போதும் குயில் குஞ்சுகளை எளிதில் அடையாளம் காண முடியாது. அவை சில காலத்துக்குப் பின்பே தெளிவாக அடையாளம் தெரியும். தன்னால் ஒரு கூட்டை உருவாக்க முடியாது என நினைக்கின்ற குயில்கள், பிறருடைய கூடுகளைப் பயன்படுத்தி தங்களுடைய இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. இது எல்லோருக்கும் தெரிந்த கதை தான். இது தான் இன்றைய இலக்கிய உலகிலும் நடக்கிறது. காகங்கள் தங்களுடைய சிந்தனைகளைப் பயன்படுத்தி, கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு படைப்பை உருவாக்குகின்றன. அவற்றை எளிதில் பிடுங்கிக் கொண்டு போய், பெயிண்ட் அடித்து குயில்கள் விற்பனை செய்து விடுகின்றன. கடைசியில் காகங்களை விட அவை பிரபலமடைந்தும் விடுகின்றன.

முன்பெல்லாம் ஒரே மாதிரியான இரண்டு படைப்புகள் வந்தால், அதை இணை கற்பனை என்று சொல்வார்கள். அபூர்வமாகத் தான் அப்படி நடக்கும். ஆனால் இப்போது அப்படியல்ல, காப்பியடிப்பது எப்படி என்பதை இணையமே கற்றுத் தருகிறது. கடந்த வாரம் ஒரு யூடியூப் வீடியோ பார்த்தேன். அதன் தலைப்பே, அடுத்தவர்களின் படைப்பைச் சுட்டு புதிய வீடியோக்கள் உருவாக்குவது எப்படி என்பது தான். அதற்கு மில்லியன் கணக்கான வியூஸ். ஒருவருடைய படைப்பைச் சுட்டு, அதில் மானே தேனே பொன்மானே எல்லாம் கலந்து ஒரு புதிய படைப்பாய் விற்பனை செய்கின்ற ஒரு மோசமான கலாச்சாரம் இன்று எல்லா இடங்களிலும் நிரம்பியிருக்கிறது.

அவர்கள் அதற்கு ஒரு வழி வைத்திருக்கி றார்கள். ஒரு கட்டுரையிலிருந்து நான்கு பத்திகளை உருவுவது, பிறகு அதே தலைப்பின் இன்னொருவர் எழுதியிருக்கும் கட்டுரையிலிருந்து மூன்று பத்திகள் உருவுவது. அது சார்ந்த ஏதேனும் ஒரு கதையை காப்பியடிப்பது. எல்லாவற்றையும் இணைத்துக் கட்டுவது. ஆங்காங்கே பிசிறித் தெரியும் சொற்றொடர்களை



மட்டும் செதுக்குவது. இப்போது புதிய கட்டுரை தயார். நாலு இடத்துல இருந்து பிரியாணி வாங்கி, எல்லாத்தையும் கூட்டிக் குழப்பி புதிய வகை பிரியாணி செய்வது போலத் தான் இது !

ஒரு வீட்டில் புகுந்து, பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்பவனை 'திருடன்' என பளிச் என சொல்கின்ற யாரும், ஒரு கலைப் படைப்பைக் கொள்ளையடிப்பவனை 'திருடன்' என சொல்வதில்லை. 'அந்த படைப்பின் பாதிப்பு', 'அந்தப் படைப்பினால் வந்த இன்ஸ்பிரேஷன்', 'அந்த படைப்பைப் போன்ற இன்னொரு படைப்பு' என ஏதோ ஒரு நாகரீகமான போர்வை கொண்டு மூடி மறைத்து விடுகிறார்கள்.

கலைத் திருட்டு என்பது இன்றைக்கு சர்வ சாதாரணமாகி விட்டதால், அதை ஒரு தவறாகவே யாரும் சொல்வதில்லை. என்னிடம் அடிக்கடி பலர் சொல்வார்கள், உங்க கட்டுரையை அங்கே பார்த்தேன்.. ஆனா உங்க பெயர் இல்லை. உங்க கவிதையை இன்னொருவர் பெயரில் பார்த்தேன். உங்கள் பாடலை இன்னொரு தளத்தில் பார்த்தேன் நிறைய வியூஸ்– என்றெல்லாம். ஒரு படைப்பு படைப்பாக எங்கும் செல்லட்டும், எனக்குப் பெயர் கிடைக்காவிட்டால் பரவாயில்லை என சொல்லி விடுவேன். காப்பியடிப்பவர்களோடு உடன்பாடு இல்லை, ஆனாலும் காப்பியடிப்பவர்களிடம் போய் சண்டை போட்டதே இல்லை. ஒரு வருடைய படைப்பை ஆதி முதல் அந்தம் வரை காப்பியடிப்பதோ,

அல்லது அங்கும் இங்குமாய்க் காப்பியடிப்பதோ, எல்லாமே தவறு தான். அது அடுத்தவர் குழந்தையை நம் குழந்தை என சொந்தம் கொண்டாடுவதைப் போன்றது. அடுத்தவர் வரவேற்பறையில் வலுக்கட்டாயமாய்ச் சென்று தூங்குவதைப் போன்றது.

இப்படி அடுத்தவர்கள் படைப்பைக் காப்பியடிப்பதால் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்பதைப் பற்றிய ஒரு டாப் 10 லிஸ்டை போடலாம் என நினைக்கிறேன்.

முதலில், அடுத்தவர்களின் படைப்புகளைக் காப்பியடிக்க வேண்டும் என சிந்திக்கும் கணத்தில், நம்முடைய சொந்த சிந்தனையை துருப்பிடிக்க விடுகிறோம். அதன் பின் காப்பியடிக்கும் வழிகளைத் தான் மனம் தேடுமே தவிர, நமது மூளைக்கு வேலை கொடுத்து புதிய

17 ஆம் பக்கம் பார்க்க...







30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்

சிந்தனை களை உருவாக்க முடியாமல் போகும். இரண்டாவது, நாம் காப்பியடிக்கி றோம் என்பது தெரிந்தாலே, நமக்குரிய பெயர் கெட்டு போய் விடுகிறது. ஒரு முறை காப் பியடித்தாலே போதும், அதன் பின் நமது சொந்தப் படைப்புகள் கூட அந்தப் பார்வை யில் தான் பார்க்கப்படும். 'இதை எங்கே யிருந்து சுட்டானோ ?' என்று தான் வாய்கள் பேசும். நமது மரியாதையை இழக்க இந்தப் பழக்கம் காரணமாகி விடும்.

மூன்றாவது, காப்பிரைட் செய்யப்பட்டவ ற்றை காப்பியடிக்கும் போது அவை சட்டச் சிக் கல்களைக் கூட உருவாக்கும். இந்தியாவில் இத்தகைய சிக்கல்கள் குறை

வாய் இருந்தாலும், வெளிநாடுகளில் காப்புரிமை மீறுதல் பெருங் குற்றமாய்ப் பார்க்கப்படுகிறது. விதிக்கப்படும் அபரா தம் மிகக் கடுமையாய் இருக்கும்.

நான்காவது, நமது வளர்ச்சிக்கு இந்தப் பழக்கம் தடையாய் மாறிவிடும். ஒரு கவி ஞன் தனது ஒவ்வொரு கவிதையையும் முந்தைய கவிதையை விட அற்புதமாய் எழுத வேண்டும் என்றே நினைக்கிறான். அதற்காக தனக்கே அவன் சவால் விட்டு படைப்புகளை உருவாக்குகிறான். அதன் படி ஒவ்வொரு படைப்பின் முடிவி லும் அவன் வளர்கிறான். காப்பியடி க்கும் பழக்கம் இந்த வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகி விடுகிறது.

ஐந்தாவது, இது நமது குணாதிசயத்தை காயப்படுத்துகிறது. எந்த ஒரு மனிதனும் நேர்மையானவனாக, பிறரை மதிப்பவனாக இருப்பதே சிறப்பா னது. நல்ல குணாதிச

'பிரதி'வாதிகள்!

# ஒரு படைப்பாளி ஒவ்வொரு படைப்பின் முடிவிலும் அவன் வளர்கிறான் காப்பியடிப்பவன் வளர்ச்சிக்கு அதுவே முட்டுக்கட்டையாகி விடுகிறது




யங்களே ஒரு மனி தனை நேசிக்க வைக் கும். ஒருவனுடைய படைப்பு சிறப்பானதாய் இருந்தாலும், அவன் நேர்மையற்றவனாய் இருந்தால் நேசிக்கப்படுவதில்லை. எனவே நமது குணாதிசயங்களைக் கறைபடுத்தும் இத்தகைய தவறுகளைச் செய்யாமல் இருப்பதே நல்லது.

ஆறாவது, இத்தகைய காப்பிப் படைப் புகள் மனதுக்கு திருப்தியைத் தருவ தில்லை. யாராவது பாராட்டினால் கூட ஆழ்மனதில், இந்தப் பாராட்டுக்கு நான் சொந்தக் கார னில்லை எனும் சிந்தையே எழும். பிறருடைய சான்றிதழை வைத்துக் கொண்டு நான் வெற்றி பெற்றேன் என சொல்வதைப் போல, உண்மையற்ற போலித்தனமான ஒரு மகிழ் ச்சியே அதில் கிடைக்கும்.

ஏழாவதாக, உறவுகள் உடைபட இது காரணமாகிவிடும். படைப்பாளர்க ளிடையே உள்ள நட்புறவை இந்த காப்பி உடைத்து விடும். எல்லோரும் இணைந்து செயல்பட முடியாதபடி இந்த காப்பியடிக் கும் பழக்கம் உறவிடையே கோடரி வைத்து விடும்.

எட்டாவதாக, இது நமது தன்னம்பிக்கை கயைத் தகர்த்து விடுகிறது. நம்மால் ஒரு படைப்பை உருவாக்க முடியும் என்கின்ற சிந்தனையை மழுங்கடித்து விடுகிறது. நாம் படைப்புகளை சொந்தமாக உருவாக்க,




உருவாக்க நம்மால் தொடர்ந்து பிரமாதமான படைப்புகளை உருவாக்க முடியும். காப்பிய டிக்க காப்பியடிக்க, நமது தன்னம்பிக்கை வலுவிழந்து, பிறர் மீது நம்பிக்கை வைக்கும் நிலைக்கு வந்து விடும்.

ஒன்பதாவதாக, மனதளவிலும் பாதி ப்புகள் ஏற்படலாம் என்கின்றனர் உளவிய லார்கள். பிறருடைய படைப்புகளைத் தொடர்ந்து காப்பியடிப்பவர்களிடம் மன அழுத்தம், குற்ற உணர்வு,பயம்,பதட்டம் போன்றவையெல்லாம் இயல்பாகவே வந்து விடும் என்கின்றனர் அவர்கள்.

பத்தாவதாக,நமது அடையாளம் இழந்து விடும். ஒவ்வொரு படைப்பாளியும் தனித்து வமானவன். அவனது படைப்பானது அவனது பால்யம், அவனது இளமை, அவனது கல்வி, அவனது வாழ்க்கைச் சூழல், அவனது பெற்றோர், அவனது நட்பு என எல்லாவற்றையும் உள்ளடக்கிய அனுபவத் திலிருந்தே புறப்படும். அதை ஒருவன் மறுதலித்து விட்டு பிறருடைய படைப்பைத் திருடும் போது தனக்கான தனித்துவ அடை யாளத்தை இழந்து விடுவான்.

எனவே, காப்பியடிக்கும் சிந்தனையை விட்டு வெளியே வருவோம்!படைப்பாளரை மதிப்போம்,படைப்புகளை நேசிப்போம் ! நமது தனித்துவ அடையாளத்தை இலக்கிய த்தில் படைப்போம்!





# ஜேர்மன் கலாச்சார மன்றத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா

ஜேர்மன் கலாச்சார மன்றத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவும் சித்திரை திருநாள் கொண்டாட்டமும் 27.04.2024 சனிக்கிழமை அன்று ஆன்ஸ்பேர்க் நகரில் கலாச்சார மன்ற தலைவர் பண்ணாக்கம். கொம் பிரதமஆசிரியர், ஊடக வித்த கருமான திரு கிருஷ்ணமூர்த்தி கந்தசாமி அவர்களின் தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது.இவ்விழா பாடல்,ஆடல் பறை, இசையும் கதையும்,விருந்தினர் உரை கள்,கௌரவிப்புகள்,சுரத்தட்டிசை போன்ற பல நிகழ்வுகளுடன் சிறப்புற நடந்தேறியது.

இரண்டு கலைஞர்களுக்கு பட்டங்கள் கொடுத்து கௌரவிக்கப்படுவதை வழக்கப் படுத்திக்கொண்டு வரும் இம் மன்றம்



அபிநயசுரபி அன்ரனி சுரேஷ்குமார்



சுரவாரிதி சந்தோஷ் சிவகுமார்

இம்முறை நிருத்திய நாட்டியாலய அதிபர் பரதசூடாமணி, நாட்டிய கலைமாணி திருமதி அமலா அன்ரனி சுரேஷ்குமார் அவர்களுக்கு அபிநயசுரபி எனும் பட்டமும், சுரதட்டிசை ஆசிரியர் செல்வன் சந்தோஷ் சிவகுமார் அவர்களுக்கு சுரவாரிதி என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.உலகத்தமிழ் பண்பாட்டு மையத்தின் ஆரம்பகர்த்தாவும் தலைவருமான மாவை தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் யேர்மனியில் வாழுகின்ற எழுத் தாளர்கள், அறிவிப்பாளர்கள், சமூக செயற்பாட் டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

திரு.முகில்வண்ணன், சாந்தினி துரைய ரங்கன் ஆகி யோர் நிகழ்ச்சிகளை தொகு த்து வழங்கினர். யேர்மன் கலாசாரமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் இணைந்து விழாவை சிறப்புற நடாத்தினார்கள்.

தொகுப்பு: சாந்தினி துரையரங்கன்




30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்


03 ஆம் பக்கத் தொடர்ச்சி...



# ரஷ்ய – உக்ரைன் போர் முனைகளில் கூலிப்படைகளாக சிங்கள ராணுவம்!

நிரம்பி வழிகின்றன, இது பெரும்பாலும் மாதத்திற்கு 3,000 முதல் 4,000 அமெரிக்க டொலர் என்பது அவர்களைக் கவர்கிறது. பல முன்னாள் வீரர்கள் மோதலின் தன்மை மற்றும் அவர்கள் வகிக்கும் குறிப்பிட்ட பாத்திரங்கள் குறித்து தவறாக வழிநடத்தப்பட்டதாக தகவல்கள் உள்ளன.

இந்தப் போரில் இலங்கையின் முன்னாள் ராணுவ வீரர்கள் இணைவது ஒரு சிக்கலான பிரச்சினை. சர்வதேச சட்டம் கூலிப்படையினரை ஆட்சேர்ப்பு, பயிற்சி, நிதியுதவி அல்லது பயன்படுத்துவதை தடை செய்கிறது. கூலிப்படையின் வரையறை சர்ச்சைக்குரியது. இலங்கை அரசாங்கம் அவர்களின் முன்னாள் ராணுவத்தினர் கூலிப்படையினர் அல்லமாறாக தனியார் இராணுவ நிறுவனங்களில் பணிபுரியும் ‘ஒப்பந்த வீரர்கள்’ என்று கூறுகிறது.

தனியார் இராணுவ நிறுவனங்களின் கூற்றுக்கள் இருந்தபோதிலும், உக்ரைனில் மோதலில் இணையும் பல இலங்கையர்கள் ஆபத்தான போர் மண்டலத்திற்குள் நுழைகிறார்கள் என்பது தெளிவாகிறது. குறைந்தபட்சம் 16 இலங்கையின் முன்னாள் ராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக செய்தி அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். இலங்கை அரசாங்கம் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்து, பொய்யான வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தியுள்ளது. தாயகம் திரும்ப விரும்புவோரை திருப்பி அனுப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

## சிக்கலாகும் பிரச்சினை

உக்ரைன் போரில் இலங்கையின் முன்னாள் படைவீரர்களின் ஈடுபாடு அதன் சாத்தியமான விரிவாக்கம் என்பன இதனை எவ்வாறு கையாள்வது என்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கல்களை ஏற்படுத்தும். மோதலின் இரு தரப்பிலும் அவர்களின் இருப்பு பேச்சுவார்த்தைகளை சிக்கலாக்கும் மற்றும் சர்வதேசமயமாக்கப்பட்ட போரின் அபாயத்தை அதிகரிக்கும். மேலும், நாடு திரும்பும் படையினர் அனுபவிக்கும் உயிர் இழப்புகள் மற்றும் உளவியல் அதிர்ச்சிகள் இலங்கை சமூகத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

தற்போது உக்ரைனில் உள்ள இலங்கையின் முன்னாள் சிப்பாய்களின் பாதுகாப்பில் உடனடி கவலை இருந்தாலும், பெரிய பிரச்சினை என்னவென்றால், முதலில் அத்தகைய ஆட்சேர்ப்புக்கு அவர்களை பாதிக்கக்கூடிய பொருளாதார நெருக்கடிதான். குறிப்பாக படைவீரர்களுக்கு நிலையான தொழில் வாய்ப்புகளை உருவாக்க இலங்கை அரசாங்கம் நீண்டகால பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

வெளிநாட்டுக் கூலிப்படையினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக தனியார் இராணுவ நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தையும் இந்த நிலைமை எடுத்துக்காட்டுகிறது. பாதிக்கப்படக்கூடிய நபர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், சர்வதேச சட்டத்தை பின்பற்றுவதை உறுதிப்படுத்தவும் கடுமையான விதிமுறைகள் மற்றும் அமலாக்க வழிமுறைகள் தேவை.

உக்ரைன் போரில் இலங்கையின் ஈடுபாடு, மோதல்களின் உலகளாவிய ஒன்றோடொன்று இணைந்திருப்ப



தையும், பொருளாதார விரக்தியின் மனித விலையையும் அப்பட்டமாக நினைவூட்டுகிறது. மேலும் இரத்தம் சிந்துவதைத் தடுக்கவும் மற்றும் அதன் குடிமக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும், இலங்கை வறுமை மற்றும் வேலையின்மைக்கான அடிப்படைக் காரணங்களைத் தீர்க்க வேண்டும். மேலும், உலகளாவிய கூலிப்படை சந்தையை ஒழுங்குபடுத்தவும், எதிர்கால மோதல்களில் படைவீரர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உக்ரைன் போரின் இரு தரப்பிலும் இலங்கையின் முன்னாள் சிப்பாய்கள் இருப்பது இலங்கையின் பொருளாதாரப் போராட்டங்களில் ஆழமான வேர்களைக் கொண்ட ஒரு சிக்கலான பிரச்சினையாகும். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், அவர்கள் வீடு திரும்புவதைப் பாதுகாப்பதிலும் உடனடி அக்கறை இருந்தாலும், அவர்களை முதலில் பாதிப்படையச் செய்யும் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிப்பதுதான் நீண்டகாலத் தீர்வு என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

பொருளாதார மீட்சிக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், தனியார் இராணுவ நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலமும், இலங்கையும் ஏனைய நாடுகளும் விரக்தியால் மக்களைப் போர்க்களங்களுக்குள் தள்ளாத உலகத்தை உருவாக்க முடியும். ஆனால், இலங்கை போன்ற வளரும் நாடுகள் அவ்வாறான நீண்ட கால திட்டமிடலுடன் செயற்படுகின்றனவா?


யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528




யேர்மனியில் Doctor ஆக வேலை செய்யும், 38 வயதுடைய திருமணமாகாத, எமது மகளுக்கு, படித்த மணமகனை எதிர்பாக்கின்றோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்.
+49 1512– 1980560



யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Biologie Master படித்து முடித்து வேலை செய்யும் நற்குணமுள்ள 30 வயது சைவ சமயத்தை சேர்ந்த பெண்ணுக்கு படித்த குணமுள்ள மணமகனை எதிர்பார்ககிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்;
015781663466



தற்போது நமது உலகில் பல்வேறு நாடுகளுக்கிடையே போர் நடைபெற்று வருகின்றது. அணு ஆயுதங்கள் கொண்ட நாடுகள் கூட போரில் ஈடுபட்டுள்ளன என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரிந்த விடயமாகும்? இவ்வாறு இருக்க, நீங்கள் எப்போதாவது இதை சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? நம் உலகில் ஓர் அணுகுண்டுப் போர் நடந்து விட்டால், அதன் பிந்தைய விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று தெரியுமா? அது எவ்வாறு நம்மை பாதிக்கக் கூடும் என்பதைப் பார்ப்போமா?

ஓர் அணுகுண்டு வெடிக்கும்போது,




# அணுகுண்டுப் போர்களின் பிந்தைய விளைவுகள்; உங்கள் மனதைக் குலைக்கக் கூடிய உண்மைகள்!

அதனால் ஏற்படும் உடனடி தாக்கம் பேரழிவாக இருக்கும். ஒரு மாபெரும் வெடிப்பு அலையைக் கற்பனை செய்யுங்கள், இது முழு நகரங்களைத் தரைமட்டமாக்கும் சக்தியைக் கொண்டதாகும். இதைத் தொடர்ந்து வெப்பக் கதிர்களை மிஞ்சியிருக்கும் அனைத்தையும் எரித்துவிடும். மின்காந்த அலைகள் (நுஆீ) மின்னணு சாதனங்களை அழித்து, நவீன நாகரிகத்தை இருட்டாக்கிவிடும். ஆனால் உண்மையான பயம் கதிர்வீச்சில் உள்ளது. ஆரம்ப வெடிப்பிலிருந்து மீண்டவர்கள் கடுமையான கதிரியக்க நோயால் பாதிக்கப்படுகிறார்கள், இது வாந்தி, இரத்தக்கசிவு, மற்றும் இறுதியில் மரணம் என மாறும்.

பயங்கரமானது முடிந்துவிட்டதா? இல்லவே இல்லை! அணுகுண்டு வெடிப்பால் ஏற்படும் பரவலான தீப்பற்றிகளால் பரந்த அளவில் சாம்பல் மற்றும் புகை உயர் வளிமண்டலத்துக்குள் செல்கிறது, இதனால் சூரிய ஒளி மறைக்கப்படுகிறது மற்றும் பூமி “அணுகுண்டு பனிக்காலம்“ என்று அழைக்கப்படும் Nuclear Winter“ இல் மூழ்கிவிடுகிறது. வெப்பநிலை கடுமையாகக் குறைந்து, முன் சூடான மற்றும் வளமான உலகம் குளிராகவும் வறண்டதாகவும் மாறுகிறது. வேளாண்மை வீழ்ச்சி அடைகிறது, ஏனெனில் குளிர்ந்த மற்றும் இருண்ட சூழலில் பயிர்கள் வளராது. இதன் விளைவாக பூமியில் வாழும் உயிரினங்கள் பட்டினியில் தவிக்கும். சூழ்நிலைகள் சீர்குலைந்து, எண்ணற்ற உயிரினங்கள் அழிவை நோக்கிச் செல்லும்.

ஆரம்ப வெடிப்பிலிருந்து மற்றும் அணுகுண்டு பனிக்காலத்தின் தொடக்கத்திலிருந்து பிழைத்திருப்பது தான் ஆரம்பம். சுகாதார விளைவுகள் கொடூரமாகவிருக்கும். கதிரியக்க நோய்ப் பரவலாக உள்ளதால், இதனால் பயங்கரமான துன்பமும் உயர் இறப்பு விகிதமும் ஏற்படுகின்றன. நீண்டகாலக் கதிரியக்கத் தால் புற்றுநோய் அபாயங்கள் மற்றும் மரபணு மாறுபாடுகள் அதிகரிக்கின்றன, இது எதிர்காலத் தலைமுறைகளைப் பாதிக்கும். இத்தகைய அழிவைக் கண்டு மன உளைச்சலால் பல தீவிர மன நலம் தொடர்பான பிரச்சினைகள், உட்பட பதற்றம், மற்றும் மனச்சோர்வு ஏற்படலாம். மருத்துவமனைகள் அழிக்கப்பட்டு, சுகாதார முறைமைகள் முறிந்து போகும் போது, பிழைத்தவர்களுக்குப் போதுமான மருத்துவ பராமரிப்பு வழங்குவது கடினமாகும்.

இது எல்லாம் போதாதென்று நமது சுற்றுச்சூழல் அடையாளம் தெரியாத நிலையாக மாறும். கதிரியக்க மாசுபாடு, நீர் மற்றும் மண் ஆகியவற்றைப் பல ஆண்டுகள் அல்லது தசாப்தங்களுக்கு அசுத்தப்படுத்தி விடுகிறது. இந்த மாசுபாடு பரந்த பகுதிகளில் பரவுகிறது, இது தூர இடங்களைப் பாதுகாப்பற்றதாக மாற்றுகிறது. வளிமண்டலத்தில் உள்ள சாம்பல் பூமியைக் குளிர்விக்க மட்டும் அல்லாமல் வானிலை முறைமைகளை மாற்றுகிறது, இது கடுமையான வானிலை நிகழ்வுகளை உருவாக்கக் கூடும். வாழிடங்கள் அழிந்து, இனங்கள் கடுமையான புதிய நிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்க முடியாததால் உயிரினங்களின் மாபெரும் இழப்பு ஏற்படுகிறது.

அணுகுண்டுப் போர்களின் பிந்தைய விளைவுகள் மாபெரும் சமூக பிரச்சனைகளை உருவாக்கும். அரசு மற்றும் சட்ட ஒழுங்குகள் முறிந்துவிடும். இதனால் தீவிரவாதிகள் உருவாகக்கூடும். உலக பொருளாதாரம் மொத்தமாக வீழ்ச்சி அடைகிறது. மறுவாழ்வு என்பது எட்டாத ஒரு சவாலாகிவிடும். பல நாடுகளுக்கிடையே காணப்பட்ட தேசிய உறவுகளும் நட்புகளும் முறிந்து கேள்விக்குறியாகின்றன, மற்றும் புதிய, மேலும் அபாயகரமான உலக ஒழுங்கு உருவாகிறது. அணுகுண்டுப் போர்களின் பிந்தைய விளைவுகள் ஒரு பயங்கரமான உலகத்தைக் காட்டுகின்றன, இது இருள், குழப்பம், மற்றும் துன்பத்தின் உச்சக்கட்டமாகத் தெரிகிறது. ஆரம்ப அழிவுகள் ஒரு மாபெரும் விளைவுகளின் தொடக்கம் மட்டுமே. இந்த விளைவுகளைப் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் இவ்வாறான மனித வாழ்வையே அழிக்கும் போர் நடைபெறக்கூடாது என்பது தான் நமது இலக்காக இருக்கவேண்டும். இதற்கு நம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யத் தான் வேண்டும். என்ன நினைக்கின்றீர்கள்?



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)







## முள்ளியவளை 'மருதம்' பண்ணைக்கு பாட்டினில் அன்பு செய்த SRS தமிழ் வானொலி

SRS தமிழ் வானொலியின் 5ஆம் ஆண்டு “பாட்டினில் அன்பு செய்“ நிகழ்வும் 17.02.24 லண்டன் மாநகரில் நடைபெற்று அவ் நிகழ்வினூடாக சேகரிக்கப்பட்ட நிதி (6 லட்சத்து 60 ஆயிரம் ரூபா) “இசைக் கலாமணி“ “கலாபூஷணம்““சங்கீத வித்துவான்“ திரு.ஐ.சங்கரநாராயணன் ஞாபகர்த்த நினைவாக முள்ளியவளை உறவுச்சோலைக் கழகத்தின் “மருதம்“ பண்ணை மேம்பாட்டுக்காக வழங்கப் பட்டது. இந்த நிகழ்வு 28.03.24 அன்று நிறைவாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு அமரர் திரு. சங்கரநாராயணன் ஐயாவின் துணைவியார் “கலாபூஷணம்“ “சங்கீதவித்துவான்“ திருமதி வத்சலா தேவி சங்கரநாராயணன், அவர்கள் மகன் திரு ரவிசங்கர் சங்கரநாராயணன் (SRS ரவிஷான்),திருமதி அமுதா ரவிசங்கர்,திரு.பார்த்தீபன் பத்மதாசன்,

மற்றும் முள்ளியவளை கிராம உத்தியோகஸ்தர்கள், பண்ணை ஊழியர்கள், கிராம மக்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.


















# ஏ.சீ.தாசீசியஸ் அவர்களின் அரங்கப் பயணத்தைப் பதிவு செய்துள்ள விபரணப்படம்!





ஏ.சி.தாசீசியஸ் அவர்களின் நாடக மற்றும் ஊடகத்துறைப் பங்களிப்பும் அவரது பன்முக ஆளுமையும் தமிழுலகம் நன்கறிந்ததே. அவருடைய நாடகத் துறைப் பயணத்தினைப் பிரதிபலிக்கும் வகையிலான ஆவணத் திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த திரைப் பட மற்றும் ஆவணப்பட நெறியாளர் அம்ஷன் குமார் அதனை இயக்கியுள்ளார். சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி அதனைத் தயாரித்துள்ளது. அதன் நிறுவனர் அன்ரன் பொன்ராஜா உருவாக்கப் பணிகளை ஒருங்கிணைத்திருக்கின்றார்.

பல்துறை சார்ந்த பங்களிப்பினை தாசீசியஸ் அவர்கள் வழங்கியிருந்தாலும் அவருடைய அரங்கச் செயற்பாடுகள் குறித்த பயணமே படத்தில் முதன்மையாகப் பதிவாகியுள்ளது.

ஆவணப்படத்தினை கடந்த ஞாயிறு சுவிஸ் பேர்ண் நகரின் Cine ABC திரையரங்கில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. தாசிசியஸ் அவர்களோடு அவர் பற்றிய ஆவணப்படத்தினைப் பார்க்கக்கிடைத்தமை அரிய வாய்ப்பு. திரையிடலைத் தொடர்ந்து காத்திரமான விமர்சனபூர்வமான உரையாடலும் இடம்பெற்றது.


தாசீசியஸ் அவர்கள் ஈழ மற்றும் புலம்பெயர் நாடகத்துறையில் அறுபது ஆண்டுகளுக்கு மேலான இயங்குதலைக் கொண்டிருப்பவர்.

புத்தாக்கப் படைப்பாக்கங்களுக்கான அடிப்படை என்பது வேரை அறிந்திருத்தல், அவற்றைத் தேடுதல் என்பதிலிருந்து தொடங்குகின்றது. அந்த வகையில் தாசீசியஸ் அவர்களின் அரங்க முயற்சிகளின்



அணுகுமுறை முக்கியமானது. அதாவது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள், பாரம்பரிய கலை வடிவங்களை அறிந்து அவற்றைத் தான் கற்ற நவீன அரங்க வடிவங்களோடு இணைத்து நாடகங்களை உருவாக்குகின்ற-நெறிப்படுத்துகின்ற அணுகுமுறை அதுவாகும். அந்த அணுகுமுறையே ஈழத்து அரங்குகளுக்கான புதிய போக்கினை உருவாக்கிய அவரது உத்தியும் அணுகுமுறையுமாகும்.

நாடகத்துறையில் அவரது வகிபாகம் பன்முகப்பட்டது. நடிகர், நாடகப் பயிற்சியார், பிரதியாக்குநர், நெறியாளர், ஈழத்து நாடகத்திற்கான கோட்பாட்டு உருவாக்கி



ரூபன் சிவராஜா
(நோர்வே)

எனவாக அவை பன்முகப் பரிமாணங்களைக் கொண்டவை. பயிற்சியாளர் எனும் போது அது நாடகக் கல்வியைக்குறிக்கின்றது. குரல் வளப்படுத்தல், மூச்சு முறைமைகள், உடல் மொழிப் பயன்பாடு ஆகிய பயிற்சிகள் அதற்குள் அடங்குகின்றன.


1960களின் ஆரம்பத்தில் ஏனையவர்களின் பிரதிகளை நெறியாள்கை செய்தவர்.பின்னர் சொந்தப் பிரதிகளையும் நெறியாள்கை செய்திருக்கின்றார்.ஈழத்து நாடகத்துறையில் முத்திரை பதித்த பல நாடகங்களை உருவாக்கியிருக்கின்றார்.இன்றும் அவற்றிற் பல முன்னுதாரணமானவையாகவும் ஈழத்து நாடகத்துறையில் பாய்ச்சல் என்று கருதப் படுகின்றன. ஈழத்து நாடகத்திற்கான தனித்துவமான அடையாளத்தையும் பாதையையும் வகுத்தவர்களில் தாசீசியசின் பங்கு தனித்துவமானது.

இந்த ஆவணப்படத்தில் அவரது முன்னோடிகளும்,அவரோடு இணைந்து பணியாற்றியவர்களும் அவரால் நாடகத் துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எனவாகப் பல்வேறு அரங்கத்துறை ஆளுமைகள் அவரது வகிபாகம் தொடர்பான கருத்துகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

அம்ஷன் குமாரின் இயக்கத்தில் ஆவணப்படத்திற்குரிய தொழில்நுட்ப நேர்த்தி பிரதிபலிக்கின்றது. உள்ளடக்கம் சார்ந்தும் பெரும் பரப்புக் கையாளப் பட்டுள்ளது. கலைத்துவ அழகியல், படைப்பாக்கம் சார்ந்த குறை நிறைகளைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுவேன்.

லூட்ஸ் மாதா புனிதப்பயணம் 2024
May , June, July, August 2024
லூட்ஸ் மாதா கோவில், இத்தாலி, Paduwa, Venedig, போத்துக்கல், Lissabon, Fatima, ஆகிய இடங்களுக்கு May , June, July, Aug, மாதங்களில் பஸ் மூலம் பிரயாணம் செய்ய, ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.



முன்கூட்டியே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: முருகா (K. MURUGA) 0297 27754, 0175 850 1489

# முளைப்பதிவுகளைக் கழுவித் துடைக்க வேண்டிய அவசியம் மனிதர்களுக்கு இருக்கின்றது

சிந்திக்கும் மனமே சிறப்பாகத் தொழிற்படும். ஏன் என்ற கேள்விக்கு விடை காண முடியாத மனம் மீண்டும் மீண்டும் அறியாமைக்குள் அகப்படும். சமுதாயத்தை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல மூளைப்பதிவுகளைக் கழுவித் துடைக்க வேண்டிய அவசியம் மனிதர்களுக்கு இருக்கின்றது.

காலை எழுந்தவுடன் காலைக் கடமை முடிக்க வேண்டியது அவசியம். உடலுக்குள் சேருகின்ற அழுக்குகளை வெளியகற்ற நினைக்கின்ற மனிதர்கள் மூளைக்குள் சேகரித்து வைத்திருக்கின்ற அழுக்குகளை அகற்ற ஏன் முடிவதில்லை? இயல்பாகவே உடலுக்கு ஏற்றதல்லாத உணவு உள்ளே சென்றுவிட்டால், வாந்தியாகவும், வயிற்றோட்டமாகவும் உடல் வெளியகற்றிவிடும். மூக்கினுள் தேவையற்ற கிருமி சென்று விட்டால், தும்மலாக வெளியகற்றிவிடும்.அதனையும் மீறிச் செல்பவை நஞ்சாகவும், நோயாகவும் உருவெடுத்து உடலுக்குத் தொல்லை கொடுக்கின்றது.உடல் போட்டி போட்டு முயன்றால், வெற்றியடையும் இல்லையென்றால், உடல் மண்ணுக்குள் அடைக்கலமாகும்.அதேபோல் மூடநம்பிக்கையை விலக்கும் மனிதன் தெளிவான மனிதனாகின்றான். மூட நம்பிக்கைக்குள் மூழ்கிப் போகும் மனிதன் எதிர்கால சமுதாயத்தை சிந்திக்கச் செய்யாது தடுக்கின்றான். இதில் வேடிக்கை என்னவென்றால், எதிர்கால சமுதாயமும் ஆட்டு மந்தைகள் போல,நாம் எப்படி எதிர்த்துப் பேசமுடியாது தலையாட்டித் தொடர்ந்தோமோ அதேபோல அவர்களும் தொடருகின்றார்கள்.

கி.மு. 399 இல் இறந்து போகும் முன்னமே சோக்ரட்டீஸ் க்ஷிக்ஷியார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டு விட்டு, எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்;; என்றும் கடவுள் என்பவர் யார்? என்றும் கேள்விமேல் கேள்வி கேட்டார். நீதியையும், ஆத்மாவையும், கடவுளையும், சமூகத்தையும் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு கேட்டார். அவரை நஞ்சூட்டியே கொன்றார்கள். ஆனால், கேள்விகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்தக் கேள்விகளுக்கு இன்றும் விடை காணமுடியாதுள்ளது.



**"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் பொருள் மெய்ப்பொருள் காணப தறிவு" என்றார் வள்ளுவர்.**

எதனையும் ஆய்வுக்கு உட்படுத்தாது வெறுமனே யார் எது சொன்னாலும் தலையாட்டுகின்ற மக்கள் வாழுகின்ற வரை மூடநம்பிக்கையில் மனிதர்கள் உட்பட்டுக் கொண்டேதான் இருப்பார்கள். எது மூடநம்பிக்கை? என்று பார்த்தால்,அது தெளிவற்ற ஞானம் என்று என்னுடைய மனம் சொல்லத் துடிக்கிறது. எம்முடைய முன்னோர்கள் செய்தார்கள் என்று கூறிக் காலத்துக்கும், காலநிலைக்கும், சமூக சூழ்நிலைக்கும் ஒவ்வாத காரியங்களைக் காவிக்கொண்டு வந்து புலம்பெயர்ந்தும் வாழுகின்றனர். இவ்வாறான மக்களைக் காணுகின்ற அறிவார்ந்த சமுதாயமானது மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது இருக்கின்றது. சமூக சீர்திருத்தவாதி வெகுசன விரோதி என்பதுபோல சொற்களுக்கு விவேகம் கொடுத்து சிந்தனைக்குள் போட்டால் மட்டுமே போதுமானது. அது சிந்திக்கத் தொடங்கிவிடும்.



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

வாசிப்புத்தான் மனிதனை முழுமனிதனாக்கும்.அது தேடலுக்கு விடை கொடுக்கும். திருமணம் செய்து கணவன் வீட்டுக்குச் செல்லுகின்ற பெண்களை முதலில் விளக்கேற்றச் சொல்லுகின்றார்கள். அவள் வாழப் போகின்ற வீட்டிலே ஒளியேற்றும் பெண்ணாக அவளுடைய நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதே அதன் மறைபொருளாகும். ஒளி என்பது அறிவார்ந்த ஞானம் என்றே புரிந்து கொள்ள வேண்டும். வீடு விளங்க நாடு விளங்கும். எங்களுடைய கலாசாரம் என்று தெளிவற்ற நம்பிக்கைகளைப் பெண்கள் சுமந்து வளருகின்ற சமுதாயத்திலேயும் அதனை ஏற்றுகின்ற போது வளருகின்ற தமிழ்ச் சமுதாயமும் தெளிவற்ற பாதயிலே செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மனிதர்கள் ஒவ்வொருவர் கையிலும் மாத்திரைப் பொட்டலங்கள். இந்த வாழ்க்கை எனக்கு போனஸ் என்று கூறுகின்ற தமிழர்களைக் காணுகின்றோம். அப்படியானால், மக்களை வாழ வைப்பது மாத்திரைகளே. அவற்றை நிறுத்தினால், மாத்திரையில் இயங்கும் மனிதர்கள் மண்ணுக்குள் சென்று விடுவார்கள். அப்படியானால், நோயுள்ள உறுப்புக்களை இயக்கும் கருவிகளுக்கு பெற்றோல் கொடுப்பது யார்? மாத்திரைகள் தானே. அப்படியானால், இயந்திர மனிதனுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனிதனால் ரொபோரோக்களை உருவாக்க முடியும். உணர்ச்சிகளையூட்ட முடியுமா?என்ற கேள்விக்கு விடை கண்டுபிடித் தாயிற்று. உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ரொபோட்டோக்களை உருவாக்கி விட்டார்கள். இன்னும் எதிர்காலம் எவற்றையெல்லாம் செய்யப்போகின்றது? என்பது கேள்விக்குறி. இவ்வாறான காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தாம் செய்கின்ற காரியங்களைப் பரீசீலனை செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

ஒரு பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு வேப்பஇலை இல்லாத காரணத்தால், ரோஜாச் செடியின் தண்டை எடுத்து வந்து பயன்படுத்தினார்கள். சிரிப்பாகவும், கேலிக்கையாகவும் இருந்தது. வாழுகின்ற நாட்டுச் சூழலில் சரிவராது என்பதை ஏற்றுக் கொள்ளாத மனம் இவ்வாறான காரியங்களைச் செய்கின்றது. மனிதன் இறந்தால் அவனுடைய உடல் வெறும் கூடுதான் எனபதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நாம் மீண்டும் பிறப்போம், வானுலகில் சஞ்சரிப்போம் என்று எம்மை நாமே தேற்றிக் கொள்ளுகின்றோம்.

"காயமே பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" என்றார் பட்டினத்தார். இறந்தவருடைய ஆத்மா இருப்பதாகக் கருதுகின்ற மனிதர்களாகிய நாம் அந்த ஆத்மா கடவுளிடம் போய்விட்டது என்றோ கடவுளாகிவிட்டது என்றோ கருதிப் பூப்போட்டு மாலை அணிவித்துக் கடவுளாக வணங்குகின்றோம். ஆனால், அந்த மனிதன் இறந்து 30 நாட்கள் துடக்கு என்ற ஒன்றை வைத்து கிரியைகள் செய்வதன் அர்த்தம் என்ன? ஐயர் கிரியைகள் செய்தால் மட்டுமே அந்த உடல் கடவுளாகுமா? அப்படியென்றால், இறந்த மனிதனைக் கடவுளாக்கத் தெரிந்த வலிமைமிக்க ஐயரும் கடவுள்தானே. எங்கோ ஒருவர் இறந்தால், இங்கேயுள்ள உறவினரிடம் சென்று நீராகாரம் கூட அருந்த மாட்டோம் என்று அடம் பிடிப்பது எதற்கு? இறந்த உடலிலே கிருமிகள் இருப்பதனால், தலைமுழுகி அழுக்கை நீக்கிவிடுகிறோம் என்றால், கடல் கடந்து அந்த அழுக்கு உறவினரைத் தேடிச் செல்கிறது என்ற எண்ணம் எப்படி உருவாகியது? ஒருவர் செய்த செயல்களைக் காரண காரியம் இல்லாமல் அனைவரும் அதைப் பின்பற்றிச் செய்து வருவது சடங்குகள் எனப்படும். பறை அடித்து ஒருவர் வீட்டில் துக்க சம்பவம் நடந்து விட்டது என்று அறிவிக்கும் சடங்கு தொலைப் பேசிக்கு மாற்றிவிட்டோம் அல்லவா?

28 ஆம் பக்கம் பார்க்க...







# கனடா 'தமிழர் தகவல்' 33 ஆவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும்
# வருடாந்த விருதுகள் வழங்கலும் 2024



**கவிஞர் அம்பி அவர்கள் 1996 ஆம் ஆண்டு தமிழர்தகவல் விருது பெற்றவேளை.**

கடந்த ஏப்ரல் மாதம் 28 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா மண்டபத்தில், 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் வருடாந்த விருது வழங்கல் விழாவும், 'இளங்காலைச் சுவடு' என்ற சிறப்பு மகுடத்தில் 33வது ஆண்டுப் பூர்த்தி ஆண்டு மலர் வெளியீடும் நிகழ்ந்தேறியது.

கடந்த 33 ஆண்டுகளில் 280 பேர் விருது பெற்றுள்ளார்கள். அதில் 11 பேர் வெளிநாடுகளில் இருந்து விருது பெற்றவர்கள். வெளிநாடுகளில் இருந்து விருது பெற்றவர்களில் முதல் விருதினை அமரர் கவிஞர் அம்பி அவர்கள் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர் என்பதும் யாழ்ப்பாணத்தில் 1980களில் வெளிவந்த 'ஈழமுரசு', 'முரசொலி' தினசரிகளின் ஸ்தாபக ஆசிரியர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது. விழாவில் கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் Pierre Poilievre அவர்களும்,ரொறன்ரோ மேயர் திருவாட்டி முடளையை ஊாழற அவர்களும், கலந்து கொண்டிருந்தார்கள். 'தமிழர் தகவல்'ஆண்டு மலர் புலம்பெயர்ந்தோர் வாழ்வு குறித்து அறிய விரும்புபவர்களுக்கும்,, ஆராய்பவர்களுக்கும் உதவிடும் வகையில் பல்வேறு கட்டுரைகளைத் தாங்கியுள்ளது.



ஆண்டு மலர் அமரர் கவிஞர் கந்தவனம் ஐயா அவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு உள்ளது.

அதன் முதல் பிரதியை கவிஞரின் ஏகபுதல்வி வாணி கந்தவனம் அவர்களும், ஏகபுதல்வன் வாரணன் கந்தவனம் அவர்களும் பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.





30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்

சிறுகதை:



# பெயரால் வந்த வினை

தொழிற்சாலையில் ஒரு இலக்கியச்சங்கம் ஆரம்பிக்கும்போது இவ்வளவு தூரத்திற்கு வரவேற்பு இருக்கும் என சங்கரும் கௌரியும் எதிர்பார்க்கவில்லை.அவர்கள் வேலை நேரத்திற்குப் புறம்பாக, மாதத்துக்கு ஒரு தடவை கூடி பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வந்தார்கள்.

ஸ்ரோரில் வேலை செய்யும் சங்கரும், நிர்வாகப்பிரிவில் வேலை செய்யும் கௌரியும் பள்ளித் தோழர்கள் என்பதால் இணைந்து பணி செய்வதற்கு இலகுவாக இருந்தது. இலக்கியம் என்றில்லாமல், பல சமூகநலத் திட்டங்களையும் செயல்படுத்தி வந்ததால் ஊரில் அவர்களுக்குப் பெரும் வரவேற்பு இருந்தது.

சங்கம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாவதால் ஒரு கலையிரவு நிகழ்ச்சி நடத்தலாம் என ஏகமனதாக முடிவு செய்தார்கள். தொழிற்சாலையில் திரு என்ற பெரும் எழுத்தாளர் ஒருவர் வேலை செய்து வந்தார். அவரது நெறியாழ்கையில் நாடகப்பயிற்சி தொடங்கியிருந்தது. நாடகத்தில் சங்கர் கதாநாயகன். சங்கருக்கு சோடியாக நடிக்க கௌரியைக் கேட்டபோது அவள் மறுத்துவிட்டாள். சங்கரைப் பிடிக்காமல் அவள் இதைச் சொல்லவில்லை. தனக்கு மேடை ஏறினால் குரலுக்குப் பதிலாகக் காத்துத்தான் வரும் என்றாள் கௌரி.

“சங்கர்... உனக்கு நாளைக்குப் பின்நேரம் என்னோடை வேலை செய்யிற ஒரு ஆளை அறிமுகம் செய்யிறன். அவள் நல்லா நடிப்பாள்“ என்றாள் கௌரி.

“ஆர்.... ஆர்“ என்று அவசரப்படுத்தினான் சங்கர்.

“எங்கடை பள்ளிக்கூடத்திலைதான் அவளும் படிச்சவள். எங்களை விட மூண்டு வகுப்புகள் குறைவு.“

மறுநாள் பின்நேரம் கௌரி அவளை சங்கருக்கு அறிமுகம் செய்தாள்.

“சங்கர்... இவள் பிரமிளா. இவள் தான் இனி உனக்குச் சோடி“ கௌரி சொல்ல, பிரமிளா வெட்கித்தாள். சங்கர் பிரமிளாவைப் பார்த்தான். அவள் பிரமிளா அல்ல! பிரம்மிக்க வைக்கும் பெரும் நிலா. குனித்த புருவம், அகன்ற கண்கள், குவிந்த உதடுகள், கொவ்வைச்செவ்வாயில் குமிண் சிரிப்பு என பிரமிளா நின்றாள்.

“இவ்வளவு நாளும் இவளை எங்கே ஒளிச்சு வைச்சாய்... பள்ளிக்கூடத்திலும் இவளை நான் காணேல்லையே!“ ஏக்கப் பெருமூச்சு விட்டான் சங்கர்.

பிரமிளாவின் நடிப்பில் உச்சம் கண்ட சங்கர், நாடகத்தின் பெயரை ‘பிரமிக்க வைக்கும் பெருநிலா‘ என்று மாற்றச் சொல்லி திருவைப் பவ்வியமாகக் கேட்டான். திருவிற்குப் பக்கத்தில் நின்ற முருகவேள் என்ற ஒரு காவாலி, “இல்லை.... இல்லை.... முழிச்சி என்று வைக்கலாம்“ என்றான்.

“உனக்கு அவளின்ரை அழகான கண்கள் மீது பொறாமை“ என்றான் சங்கர். நாடகப் பயிற்சி விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருந்தது. சனிக்கிழமைகளிலும் நாடகம் நடித்துப் பார்த்தார்கள். கலையிரவு நெருங்கிக் கொண்டு வந்தது. கலையிரவு நெருங்க நெருங்க சங்கரும் பிரமிளாவும் நெருங்கினார்கள்.

இன்னும் ஒரு கிழமைதான் கலையிரவிற்கு இருக்கு என்ற நிலையில் பிரமிளா ஒத்திகை அன்று வரவில்லை. எல்லாரும் ஆடிப் போய்விட்டார்கள். ஹஏதாவது சுகமில்லாமல் இருக்கலாம். நான் போய் பார்த்து வருகின்றேன்‘ என சங்கர் புறப்பட்டான். ஹதபால் கந்தோர் ஒழுங்கை வழியாக வந்தால், சந்தைக்குக் கிட்டவா என்னுடைய வீடு வரும்‘ என்று முன்பொருநாள் பிரமிளா சொல்லியிருந்தாள்.

சந்தை வந்தது. சந்தையில் பூங்கொத்து ஒன்றை வாங்கி ஹாண்டிலில் தொங்கிய பை ஒன்றிற்குள் ஒளித்து வைத்துக் கொண்டான். காலம் நேரம் சரிவந்தால் பிரமிளாவுக்குக் குடுத்துவிடலாம். சந்தையில் அவளின் வீடு இருக்கும் இடம் பற்றி ஒருவருக்கும் தெரிந்திருக்கவில்லை. யாரிடம் கேட்கலாம் என்ற நிலையில், தூரத்தே குமாரவேள் தனது சைக்கிள் பாரில் மனைவியை இருத்தி, அவள் விழுந்துவிடாதவாறு கவர் எடுத்துக்கொண்டு எதிர்ப்புறமாக வருவதைக் கண்டான். அம்மியடித்துக் கொண்டு வந்த குமாரவேளை சங்கர் இடைமறித்தான்.

“குமார்.... பிரமிளாவின் வீடு எங்கை இருக்கு?“

“சங்கர் என்ரை மனிசிக்குக் கொஞ்சம் சீரியஸ். நான் டொக்ரரிட்டை அவசரமாப் போறன். உங்கை பார்... அதிலை ஒரு ஒழுங்கை வருதல்லே... அதுக்குள்ளை போய் ஹமுழிச்செல்லையா வீடு‘ எங்கை எண்டு ஆரிட்டைக் கேட்டாலும் காட்டுவினம். “சந்தைச் சத்தத்தில் குமாரவேள் சொன்னது சங்கருக்கு ஹமுழுச்செல்லையா‘ என்று கேட்டது. ஹபிரமிளாவின்ரை அப்பா முழுச்செல்லையா எண்டா, பாதிச்செல்லையா யார்?‘ என்ற நியாயமான கேள்வியுடன் சைக்கிளை மிதித்தான் சங்கர்.

ஒழுங்கை வந்தது. முதல் இரண்டு வீடுகளிலும் சத்தம் சந்தடி இல்லை. மூன்றாவது வீட்டில் ஒரு பெண்மணி குப்பை கூளங்களைக் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தார். கேற் பூட்டி இருந்தது. கேற்றின் ஒரு நுனியில் உட்புறமாக ஒரு நாய் கட்டி இருந்தது. மறுநுனியில் ஒரு மரக்குற்றியில் ஒருவர் தன் வெறும் முதுகை வீதிக்குக் காட்டியவாறு இருந்து, கூட்டிப்பெருக்கும் தன் மனைவியை சைட் அடித்தபடி இருந்தார்.

“அக்காய்... முழுச்செல்லையா வீடு எது?“

முழிச்செல்லையா வீட்டிலேயே போய் முழுச்செல்லையாவைக் கேட்டால் என்னாகும்? முழிச்செல்லையா என்பது அங்கே தினமும் நடக்கும் ஓரங்க நாடகம். யாராவது கேற்றில் நின்று கத்திவிட்டுக் கல்லும் எறிந்து விட்டுப் போவார்கள். அதன் பிறகு அவரின் மனைவி ஆடும் சன்னதமும், அதற்கு ஏற்றாற்போல் நாய் ஊளையிடும் சத்தமும் ஊரை அமர்க்களப்படுத்தும். இன்று சங்கர் மாட்டிக் கொண்டான்.

விளக்குமாற்றையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்தாள் அந்தப்பெண்மணி. சங்கருக்கு அவளைப் பார்க்கச் சிரிப்பாகவும் இருந்தது, பயமாகவும் இருந்தது.

“இஞ்சை முழியுமில்லை கிழியுமில்லை. ஓடும் கெதியாய்“

அப்பொழுது மரக்குற்றியில் இருந்தவர் திரும்பி கேற்றைப் பார்த்தார். அவரது கண்கள் இரண்டும் பிதுங்கி ... திரிசங்கு, சொர்க்கத்துக்கும் பூமிக்குமிடையே நின்று தொங்கிக்கொண்டு ஊசலாடியது போல – பாதி வழியிலே நின்று பரிதவித்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டான் சங்கர். கேற்றைத் திறந்து நாயை அவிழ்த்து விட்டாள் அந்தப் பெண். “பிரமிளா.... பிரமி“ கொன்னை தட்டியபடியே சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கொஞ்சத்தூரம் ஓடி, பின்னர் சைக்கிளில் பாய்ந்து ஏறினான் சங்கர். பழைய துணி கிழிபடுவது போலச் சத்தம் கேட்கவே, ஜீன்ஸ் கிழிந்துவிட்டது என்பதை சங்கர் உணர்ந்தான். நல்லவேளை நாய் அதைப் பார்க்கவில்லை. பூங்கொத்தை நாய்க்கு எறிந்து விட்டு தலைதெறிக்க ஓடித் தப்பினான் சங்கர்.



கே.எஸ்.சுதாகர்
(அவுஸ்ரேலியா)




30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்


SIVINS
SHIVAVINOBANS
WWW.SIVINS.COM
SCAN ME
உங்கள் செலவைக் குறைக்கும்
மந்திரம்
0179 72 67895
FINANZBERATUNG
Strom & Gas | Immobilie | Finanzierung
மின்சாரக்கட்டண விலை உயர்வு,
புதிய வீடு வாங்க, கடன், சேமிப்பு
என்று பல கேள்விகள் உண்டா?
ShivavinobanS, Rheinische Strasse 64, 44325 Dortmund, www.sivins.com, 0179 72 67895

## தொலைத்த இடத்தில் தேடுதல் -03



# இறந்த தம் மூதாதையருடன் இயல்பாகப் பேசும் மக்கள்

கிழக்கு மாகாணத்தில் வாழ் பழங்குடி மக்களான வேடர்களின் ஒருசடங்கு முறையினை கழுவன்கேணி எனும் ஒரு கிராமத்தில் நேரில்பார்த்த அனுபவம் இது. கழுவன்கேணி மட்டக்களப்பில் பழங் குடிகளான வேடுவ குல மக்கள்வதியும் பூமி. வேடர் இலங்கையின் பூர்வீக குடிகள் மாத்திரமன்றி கிழக்கு மாகாணம் எங்கும் பரவி வாழ்ந் துள்ளனர்.

இயக்கர் எனஅழைக்கப்படும் பூர்வீக குடிகள் இவர்கள் என்பது பொது அபிப்பி ராயம். மஹாவம்சம் அவர்களை விஜயன் மனைவி குவேனி வழித்தோன்றல்களாகக் கூறும் என்னிடம் கற்ற மாணவன் ஒருவன் அக்குடியில் வந்தவன். கழுவன்கேணி வேடர் நிகழ்த்திய சடங்கைக்காண என்னை அவன் அழைத் திருந்தான். அங்கு ஒரு அடர்ந்தகாட்டை வெட்டி, வெளியாக்கி துப்பரவு செய்து, பந்தல்கள் அமைத்து, மடைபரப்பி தம் முன்னோரை வரவழைக்க ஒரு பெரும் கூட்டம் நின்று கொண்டிருந்தது. இறந்துபோனவர்கள் மீண்டும் வருவாரா? உரையாடுவார்களா? எப்படி உரையாடுவார்கள்? என்ற சந்தே கம் உங்களுக்கு எழலாம். ஆனால் அந்த பழங்குடி மக்களைப் பொறுத்தவரை சந்தே கத்திற்கே இடம்இல்லை அவர்களுக்கு அது நிஜம், அசைக்க முடியாத உண்மை. நம் பார்வையில் அதனைப்பார்க்காது அவர்கள் பார்வையில் அவர்கள் மனோ நிலையில் பார்த்தால்தான் அதனைப் புரிந்துகொள்ள முடியும்.

அங்கு சென்ற என்னை அவர்கள் அன்போடுவரவேற்று இலைக்கஞ்சி தந்த னர், மதிய உணவும் தந்தனர். உணவு உறவை ஏற்படுத்தியது அவர்களோடு அளவளாவினேன். பின் வரும் தகவல்கள் கிடைத்தன. அவர்களின் இறந்துபோன மூதாதையர்கள் தினமும் காலையில் இருந்துமாலை வரை வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் தெற்கிலிருந்து மீண்டும் வடக்கு நோக்கியும் ஆவி உருவில் வான் வெளியில் சஞ்சரித்துக் கொண் டிருக்கிறார்கள்.

மண்ணில் வாழும் தம்சந்ததியா ரின் நடவடிக்கைகளைக் கவனித்தபடி பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

“நாங்கள் அவர்களின் பாதுகாப்பில் வாழ்கிறோம்“ என்றார் ஒருமுதியவர். அவரிடம் அந்தப் பாதுகாப்பு நம்பிக்கை யைக் கண்டேன்.

**கிழக்கிலங்கையில் வேடர் மத்தியில் ஏழு குடிகள் இருந்தன. அவையாவன**

1. பனுவளக்குடி
2. செல்லாப்பத்துக்குடி
3. திருதக்காகணிகுடி
4. செல்லாயன்குடி
5. ஆக்கமுத்துக்குடி
6. வெல்லம்பாணன்குடி
7. வெரிஹடிகத்தேகுடி

ஒவ்வொரு குடிக்கும் ஒரு ஆதித்தாய் உண்டு.அந்த ஆதித்தாயின் மரபுவழிப் புதல்வர்கள்தான் அந்தக்குடியினர். அங்கு அந்த 7 குடிகளுள் ஒன்றான பனுவளக் குடியினரே கூடி இருந்தனர். அக்கு டியில் வந்தவளும், இப்போது இருப்ப வளுமான பொன்னி என்பவள் உடலில் அம் முன்னோர் வந்து புகுந்து தம்முடன் உரையாடப்போகிறார்கள் என்ற எதிர் பார்ப்பில் அக்குடியினர் காத்திருந்தனர்.

கொட்டு எனப்படும் பறையை ஒருவர் வாசிக்கத் தொடங்கினார், சடங் குச்சூழல் உருவாகிவிட்டது.

சடங்குக ளும் ஆரம்பமாகின. குடாநீலி, மாநீலி, கரடித்தெய்வம் ஆகியதெய்வங்கள் பொன்னி உடலுக்குள் புகுந்தன. மக்களை ஆசீர்வதித்தன. இவையாவும் பெண் தெய்வங்கள்.அம்புவில் பிடித்து ஆடின. தேன் எடுக்கசென்றன தேன் எடுப்பதில் தங்களுடன் போட்டியிடும் கரடியைச் சாந்தப்படுத்தின. சடங்கு என்பது நிகழ்ந்த ஒன்றை மீளவும் நிகழ்த்திக் காட்டுதல் எனப் படித்த வரிகள் ஞாபகம் வந் தன, இங்கே அவர்கள் தமது புராதன வாழ்வை நிகழ்த்திக் காட்டியது போல எனக்குப்பட்டது.

அதன் பின் அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இறந்த முன்னோர் கள் ஒருவர் பின் ஒருவராக பொன்னி யின் உடலுக்குள் புகுந்து அங்கி ருந்த மக்களுடன் பேச ஆரம்பித்தனர். அவர்களை அவர்கள் உத்தியாக்கள் என அழைத்தனர்.கன்னட மொழியில் உத்தி என்றால் மேலே என்று அர்த்தம்.முதன் முதலில் பொன்னி உடலில் அக்குழுவின் ஆதித் தலைவன் கழுவன் வந்தான்.



பேராசிரியர் சி.மௌனகுரு

தனது வாரிசுகளை அணைத்து மகி ழ்ந்து ஆசீர்வதித் தான், உரையாடினான். அவன் தன் மனைவி. கந்தியும் வந் திருக்கிறாள் என்று கூறிச் சென்றான். இக்கந்தியே அங்கு சடங்கு நடத்தி கொண்டிருக்கிற குடியின் அல்லது குழுவின் ஆதித்தாய்.

கந்தி வந்து, தனது வாரிசுகளை அணைத்து ஆசிர்வதித்தாள். அவர்கள் சென்றபின் இடைக்காலத்தில் அக்குடியின் தலைவனாக இருந்த தேவர் வந்தார். மக்களுடன் பேசி சுகபலம் விசாரித்தார். தன்மனைவி வந்திருப்ப தாகக்கூறிச் சென்றார். அவளும் பொன்னி உடலில் புகுந்து மக்களுடன்பேசினாள். வந்தவள் பெயர் ஆச்சி. அதன் பின்னர் பலகாலத் துக்கு முன்னே இந்தச் சடங்குகளைச் செய்தகணபதி என்பவர் வந்தார். அவர் ஒரு தலை முறைக்கு முந்திபூசைகளை நடத்திய பூசாரியாரான கப்புவனார் என அழைக்கபடுபவர். அதன் பின் காத்த முத்து என்பவர் வந்தார்.இந்த காத்தமுத் துவின் மகன்தான் சாந்தலிங்கம், இவர் அண்மையில்தான் இறந்தவர். இந்த சாந்த லிங்கத் திற்கு ஒரு மனைவியுண்டு. அவள் பெயர் இராசம்மா. அவர் உயிரோடு இன்றும் வாழ்பவர் அவரும் அச்சடங்கில் வந்து கலந்து கொண்டிருந்தார்.

29 ஆம் பக்கம் பார்க்க...




30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்




# வடக்கு மூஞ்சியும் வறட்டுக் கௌரவமும்

விடுமுறையின்காரணமாக பூங்காவிற்குச் சென்றிருந்தேன். திடீரென்று சிறு குழந்தையொன்று என் பின்னால் ஒளிந்துகொண்டது.

அம்மாக்களின் நட்புக் குழுவாக இருக்க வேண்டும். பிள்ளைகளோடு வந்திருந்தார்கள். அவர்களோடு வந்த ஒரு இரண்டு வயதுக் குழந்தையே என்னிடத்தில் வந்து ஒளிந்துகொண்டது. தாயாரின் கையில் குளிருக்கு அணியும் மேலாடை இருந்தது.

பாசமிகு தாயாரின் எண்ணம் புரிந்து விட்டதாய் எண்ணி குழந்தையை அணிந்துகொள்ளச் சொல்லி நானும் கேட்டுக்கொண்டேன். அந்தக் குறுநடைக் குழந்தையோ குளிருடையைத் தட்டி விட்டு மீண்டும் என்னை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டது. ”வெயிலாகத்தானே உள்ளது. சிறிது நேரம் கழித்து முயற்சி செய்து பாருங்களேன்” என்றேன் தாயாரிடம். அவரோ இல்லையில்லை நாங்கள் எல்லோரும் புகைப்படம் எடுத்துக்கொள்ளப்போகிறோம். அதனால்தான் அணிவிக்கப் பார்க்கின்றேன் இவனோ கேட்கதாக இல்லை என்று குற்றப் பத்திரிகை வாசித்தார்.

பிறர் பற்றியத்தில் கருத்துச் சொல்வது நாகரிகமில்லைத்தான் என்று தெரிந்தாலும் நான் காப்பாற்றுவேன் என்று கையைப் பற்றிய குழந்தையை அவர் வற்புறுத்துவதைக் காணச் சகிக்காமல் ”அணிந்திருக்கும் ஆடை நன்றாகத் தானே உள்ளது இப்படியே புகைப்படம் எடுத்தாலும் நன்றாகத்தான் இருக்கும்” என்றேன். ”ஏற்கனவே அணிந்து வந்ததில் தண்ணீர் ஊற்றி ஈரமாக்கிவிட்டான், போட்டிருப்பது மாற்றுடை” என்று இழுத்தவர் குழந்தை அழ அழ குளிராடையை அணிவித்ததோடு குழுப் புகைப்படம் எடுத்துத் தரச்சொல்லி எனக்கே அழைப்பும் விடுத்தார்.

புகைப்படம் எடுக்கச் சென்ற பின்னரே அத்தாயின் பாசப் போராட்டத்திற்கான காரணம் விளங்க நொந்துகொண்டேன்.

ஆம் அனைவரும் விலையுயர்ந்த கௌரவமான ஆடை என எண்ணிக் கொண்டு சில முக்கிய நிறுவனங்களின் தூதுவராக அந்நிறுவனத்தின் பெயர்ச் சின்னம் பொறித்த ஆடைகளோடு நின்றிருந்தனர். அதனால்தான் ஈரமாக்கிய குழந்தையின் உடையைக் களைந்த தாய் தன் மகனுக்கு வடக்கு மூஞ்சி (North Face) ஆடையை அணிந்து குழுவுக்குச் சமமாக தன் மகனை தயார் செய்திருந்தார். குழந்தையின் அழுகையைப் பார்த்த எனக்குத்தான் நான் எடுத்ததிலேயே இதுதான் சரியில்லாத புகைப்படம் என எண்ணும் அளவுக்கு வெறுப்பு வந்திருந்தது. குழுப் படத்தில் அந்தக் குழந்தையின் சிரிப்பை விழுங்கிவிட்டு எல்லா உயர் ரக நிறுவனங்களின் சின்னங்களும் சிரித்துக் கொண்டிருந்தது.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

அந்த இளந்தாயின் உளமொத்த சிலரை நான் நன்றாகவே அறிந்திருக்கிறேன். அவர்களைப் பொறுத்தவரையில் கடன் வாங்கியேனும் இதுபோன்ற ஆடைகளை அணிவதன் மூலமாகத்தான் தாம் நல்ல வாழ்க்கை வாழ்வதாக உலகத்தில் தம்மை அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள். வசதியான வாழ்க்கை என்பது எதுவென்பதை அறிந்தவன் முன்னால் சின்னத்திற்காகவே விலை வைக்கும் எந்த நிறுவனத்தின் தயாரிப்புமே எடுபடாது. அவனைப் பொறுத்தவரை பயன்படுத்துவதற்கு எளிமையான, மனநிறைவைத் தரக்கூடிய, தன் குறைந்தபட்ச தேவையை நிறைவு செய்யக் கூடிய பொருட்கள்தான் சிறந்தவை. அத்தகைய மனிதன் தன் வசதியை வெளிக்காட்டும் விதம் வேறுமாதிரியானது. அவனது வாழ்க்கை நிம்மதியையே முதன்மையாகக் கொண்டது.

ஆனால் சிலரைப் பொறுத்தவரை அவர்கள் அணியும் ஆடைகளிலும் பயன்படுத்தும் காலணி, மகிழுந்து, அழகு சாதனப் பொருட்கள் என அனைத்துமே நிறுவனத்தின் பெயருக்காகவே பணத்தை வாரியிறைத்துப் பயன்படுத்தும் பொருளாக இருக்கும். தாம் வசதியாக வாழ்கிறோம் என்பதாகப் போலிப் பாவனை செய்துகொண்டு அந்தந்த நிறுவனத்தினரையே வசதியாக வாழ வைத்துக்கொண்டுள்ளார்கள். குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயருக்காகவே வாங்கும் ஆடைகளைப் பார்க்கும்போது அவற்றைவிடத் தரமான துணியில் அதே ஆடைகளை தாய்நாட்டில் வாங்க முடியும் என்பதை உணர்ந்தவர்கள் அதன் பின் செல்வதில்லை. இன்னும் சொல்லப்போனால் அங்கிருந்து வரும் துணிகளில் தான் இந்தச் சின்னங்களே பொறிக்கபடுகின்றது.துணிகளின் தொடக்கம் தெரிந்தவர்கள் சின்னங்களுக்கான விலையில் பெருமைப்படும் மனிதர்களை நினைக்கையில் நொந்துகொள்ளவே செய்வார்கள். வாழ்வின் முடிவெதுவென்பதை உணர்ந்தவர்களும்தான்.

குழந்தைகளுக்கு என்னதான் விலையுயர்ந்த விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தாலும் அவர்கள் விளையாடுவதென்னமோ வீட்டிலுள்ள கரண்டி, தொலையியக்கி,சத்தமெழுப்பும் ஏதேனும் பொருட்களோடும்தான். அவர்களுக்காக பிரபல நிறுவனத்தில் அதிக விலை கொடுத்து வாங்குவதெல்லாம் பெற்றவர்கள் தம் பெருமைக்காகத்தானேயொழிய குழந்தைகளுக்குச் சிறந்த வாழ்வைக் கொடுப்பதற்காக இல்லை. இருப்பதைக் கொண்டு வாழப் பழக்குவற்கு மாறாக குழந்தைகளைத் தவறான வழிக்கே கொண்டுசெல்கின்றனர்.

இளைய தலைமுறையிடத்தும் இந்தச் சின்னங்கள் குறித்த மனப்பாங்கு அதிகமாக உள்ளது. பாடசாலைக்கு எடுத்துச் செல்லும் புத்தகப் பையிலிருந்து அணியும் காலணி வரை பிரபல நிறுவனத்தின் பெயர்ச் சின்னங்களோடு பயன்படுத்துவதையே பெருமையெனக் கொள்கின்றனர். புத்தகப் பையின் நோக்கமுணர்ந்த பெற்றோர்களோ, மாணவர்களோ பிற மாணவர்களின் சின்னம் பொறித்த

28 ஆம் பக்கம் பார்க்க...






# ஐரோப்பாவில் 30 வருடங்களை நிறைவு செய்து தொடரும் பத்திரிகை வெற்றிமணி (01.06.2024)

## ‘மாதம் ஒரு குழந்தை பெறும் பாக்கியம் பெற்ற நீங்கள்’



30 ஆண்டு 01.06.2024 நிறைவு பெற்று தொடரும் வெற்றிமணி பத்திரிகைக்கு, வாழ்த்து எப்படிச் சொல்வது. நானும் சில காலம் இந்த இதழியல் பயணத்தில் பயணித்திருந்த,அதனுடைய அனுபவத்தை வைத்து சொல்வ தென்றால், ‘மாதம் ஒரு குழந்தை பெறும் பாக்கியம் பெற்ற நீங்கள்“ அதனை வாழ்த்தாக எப்படிச்சொல்வது என்று தெரியவில்லை. ஏன் என்றால் வலிகளை எப்படி வாழ்த்தாக்கி கொள்வது, என்பதுதான் அங்கே வேதனை.

சில காலம் சுமந்த எனக்கே இப்படி இருக்கு என்றால், பல காலம் சுமந்த உங்களுக்கு எப்படி இருக்கும். மாதம் ஒரு மகப்பேறு,மண்ணுக்காய்,மக்களுக்காய், நீங்கள் பெற்ற அந்த மகப்பேறு, எம்மவரின் நலனுக்காய்,எம்மோடு உணர்வுக்காய், எம்மை அழைத்து,30 ஆண்டுகள் வந்து விட்டீர்கள். இன்னும் வருவீர்கள், வரவேண்டும். மக்களுக்காய் உங்கள் பணி தொடரும்.

**அன்புடன் த.இரவீந்திரன்**
**அகரம் சஞ்சிகை (தலைமை ஆசிரியர்)**

## நவீன சிந்தனையும் உழைப்புமே வெற்றிமணி இன்று கண்ட உயரம்



புலம்பெயர் மண்ணில் வெற்றிமணிப் பத்திரிகையை முப்பது ஆண்டுகளாக வெளியிட்டு வாசகர்களின் பெருங் கவனத்திற்குட்பட்டு இன்று முப்பது ஆண்டுகளையும் வீச்சுடன் எட்டிக் கடந்து தன்னிகரற்று நிற்கின்றது.

பத்திரிகை ஒன்று தன்னை மாற்றத்துக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பது வெற்றிமணிப் பத்திரிகையே. 1994ஆம் ஆண்டு இப்பத்திரிகை தோற்றம் பெற்று வளர்ந்து போது இருந்த நிலைக்கும் இன்றிருக்கும் நிலைக்கும் மிகப் பாரிய வேறுபாட்டினைக் காண முடிகின்றது.

இந்த வளர்ச்சிக்கு முற்றுமுழுதாக வெற்றிமணி ஆசிரியரே காரணமாவார். அவரின் நவீன சிந்தனையும் உடல் சோர்வறியா உழைப்புமே வெற்றிமணிப் பத்திரிகையை இந்த உயரத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறது. வெற்றிமணி ஆசிரியர் நுண்கலைப் பட்டதாரியாக டீ.கு.யு இருப்பதால் அழகியல் மீதான அவரின் ஈடுபாடு பத்திரிகையைப் பார்த்தவுடனேயே அதனை எடுத்து வாசிக்கத் தூண்டுகிறது. இது வெற்றிமணிக்கான சிறப்பு.

**எழுத்தாளர் ஏலையா**
**க.முருகதாசன் (யேர்மனி)**

வெற்றிமணி

## முப்பது வருடங் கடந்தும், தமிழ்மக்கள் வாழும் நாடுகளில் ஓங்கி ஒலிக்கிறது ‘வெற்றிமணி’



புலம்பெயர்ந்து யேர்மனியில் வாழ்ந்து, வாழ்வாதாரத்திற்காக வேலையையும் செய்து கொண்டு,கிடைத்த நேரத்தை வீணாக்காமல் தமிழ்மொழி வளர்ச்சிக்காக பத்திரிகையைத் தேர்வு செய்து முப்பது வருடத்தைக் கடந்து வெற்றி விழாவைக் கொண்டாடுகிற ஆசிரியர் திரு மு.க.சு சிவகுமாரனுக்கு இது பெருமையே.

எப்போது வேலைக்குப் போகிறார், எப்போது சாப்பிடுகிறார்,எப்போதுதான் தூங்குகிறார்,எப்படித்தான் பத்திரிகையை இவ்வளவு ஆக்கங்களுடன் வெளிக் கொணர்கிறார்,எழுத்தா ளர்களின் ஆக்கங்களை எப்படித்தான் கொண்டு வந்து சேர்க்கிறார் என்று இவரைப் பற்றி எப்போதும் ஆச்சரியமா கப் பார்ப்பேன். காலத்திற்கேற்ப இலக்கிய ஆக்கங்கள் மாறுபட்டுக்கொண்டே வருகின்றன. இதற்கு வெற்றிமணியும் விதிவிலக்கல்ல. புதிய இளம் எழுத்தாளர்களின் வருகை, யதார்த்தமான தலைப்புகளில் சுவைக்கக்கூடிய தாக எழுத்தாக்கங்களை வெற்றி-மணி மாதந்தோறும் வழங்கிக் கொண்டே வருவது அதன் சிறப்பு.

**எழுத்தாளர்**
**பொன்.புத்திசிகாமணி, (யேர்மனி)**

## வெற்றிமணியுடன் இணைந்து பயணிப்போம்



புலம்பெயர் தேசத்தில் ஆங்காங்கே சிதறிக் கிடந்த கலைஞர்களையும், அறிஞர்களையும் ஒன்றிணைத்து பெரு விழாக்களை வருடாவருடம் நடாத்தி அவர்களுக்கு கௌரவிப்புகளைச் செய்தவர் வெற்றிமணி ஆசிரியர் ஆவார். கால ஓட்டத்திற்கேற்ப பல அறிஞர்களின் நூல்களையும், இசைத் தட்டுகளையும் மற்றும் குறும்படங்களையும் வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டார். திரு. சிவகுமாரன் அவர்கள் முதன்முதலில் 1992 இல் ஐரோப்பிய தமிழ் வாசகர் வட்ட இயக்குனராக இருந்தபோது எனக்கு அறிமுகமானார். அன்றிலிருந்து இன்று வரை நல்ல நண்பராக, ஆலோசகராக என்னுடன் பழகிவருகிறார். 2019ம் ஆண்டு வெற்றிமணி வெள்ளி விழாவில் 27 ஆண்டு கடந்து எனது வாசகர் வட்ட சேவையைக் கௌரவித்து வாசகர்வட்ட விருது வழங்கியமை கண்டு அவர் ஞாபகசக்தியை வியந்து விருது பெற்றேன். வாழ்த்துக்கள்.

**திரு.க.கிருஸ்ணமூர்த்தி**
**(பண்ணாகம்.கொம்**
**பிரதம ஆசிரியர்)**

## தந்தையின் வழியதனில் தடங்களைப் பதித்தவர்

உலகமே கைநீட்டி வரவேற்கும்
ஓவியக் கலையின் நாயகன் எமது
தாயகத்தி லுதித்த தன்னேரில்லா
ஓவியக் கலைவேள் சிவகுமாரன்!

தந்தையின் வழியதனில்
தடங்களைப் பதித்தவர் இன்று
தந்தையை விஞ்சிய
தனையனாய்த் திகழ்பவர்!



**இனிய வாழ்த்துகள்**
**கவிஞர் இரா.சம்மந்தன்**
**(ராட்டிங்கன் யேர்மனி)**






30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்




அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்.
ஆங்கோர் மரப்பொந்திடை வைத்தேன்.

ஒரு படமொன்று கீறி..
வெற்றிமணிக்கு அனுப்பி வைத்தேன்

வெந்து தணிந்தது காடு.
30 ஆண்டொலிக்கும்
மணிக்கென் தோழமை.

-ஆதவன் டென்மார்க்

14 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மரவெள்ளி

தட்டுப்பாடு நிலவியது. அந்தக் காலங்களில், சில நாட்களில் காலை உணவாக மரவெள்ளியை அவித்து, கட்டைச் சம்பலோடு சாப்பிட்ட ருசி இன்றும் வாயில் மொய்த்துக் கொண்டிருக்கிறது. அவித்த மரவெள்ளியையும் கட்டைச் சம்பலையும் உரலில்போட்டு இடித்து, இரண்டையும் கலக்க வைத்து, குண்டு குண்டு உருண்டையாக உருட்டி, அப்பா செய்து தந்த அந்த மரவெள்ளி கிழங்கு உருண்டை இன்றும் நினைவில் நிழலாடுகிறது.

மரவெள்ளிக் கிழங்கு கறி என்றால் எப்பவுமே தனியாக தான் காய்ச்ச வேண்டும். யாழ்ப்பாணத்தார் சிலர் பூசணியரோடு மரவெள்ளியரை இணைத்து கறி வைப்பீனம். எனக்கென்றா மரவெள்ளியர் தனியனாக கறிச்சட்டியை ஆட்சி செய்வதே அழகு தமிழாக்களைப் போல கூட்டாட்சி மரவெள்ளியருக்கு ஒத்துவராது.

இரண்டு பச்சை மிளகாயும் வெட்டிப் போட்டு, மரவெள்ளிக் கிழங்கை பால்கறி வைத்தால், சொல்லி வேலையில்லை. தள தள என்று களி போன்ற மரவெள்ளிக் கறியை, சோற்றிக்கு பக்கத்தில் தரையிறக்கி விட்டு, முதலில் பச்சை மிளகாயோடு மரவெள்ளியை விரலால் கிள்ளி தனியே ஒரு ருசி பார்த்து விட்டு தான் சோற்றைப் பிசைய மனம் வரும்.

1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க, வெளிநாட்டு இறக்குமதிகளிற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. தென்னிலங்கையில் பஞ்சம் நிலவிய காலமாக இது கணிக்கப்பட, வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் விவசாயிகளின் பொற்காலமாக இந்தக் காலப்பகுதி கொண்டாடப்படுகிறது. தமிழர் தாயகத்தில் தாராளமாக விளைந்த மரவெள்ளிக் கிழங்கின் அருமை அந்த நாட்களில் இலங்கை நாட்டிற்கே நன்றாக புரிந்த காலமது. மரவெள்ளிக்கிழங்கை வித விதமான உணவுவகைகளாக மரவெள்ளியில் அவியல், கறி, றொட்டி, தோசை, பொரியல், கள்ளுக்கு பிரட்டல், மரவெள்ளி மா கூள், புட்டு, துவையல் என்டு செஞ்சு சனம் சாப்பிட்டது. மரவெள்ளிக் கிழங்கிற்கு மண்ணின் மணம் கமழும் நல்ல ருசி மட்டுமல்ல் செழிப்பான பொருளாதார வரலாறும் நிறையவே இருக்கிறது.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வடக்கு மூஞ்சியும் வறட்டுக்....




புத்தகங்களைத் தாண்டியே பயணிப்பர். பள்ளி செல்லும் சிறுவர்களுக்கான காலணியாவது சில ஆண்டுகள் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு சில மாதங்களுக்குள் காலளவு மாறக்கூடிய குழந்தைகளுக்கே பெயருக்காகப் பணம் பறிக்கும் நிறுவனப் பொருட்களையே பயன்படுத்துகிறார்கள். பணம் மிதமிஞ்சிச் செலவு செய்பவர்களையோ,செலவு செய்வதற்குப் போதிய வருமானம் உள்ளவர்கள் செலவு செய்வது குறித்தோ நான் பேசவில்லை. தவணை முறையிலோ,கடனட்டைகள் மூலமாகவோ வாங்கிப் பெருமைக்கெனவே அணிந்துகொள்ளும் மனிதர்கள் குறித்துத்தான் நான் எழுதுகிறேன்.

நிறுவனத்தின் பெயருக்காகப் பணம் செலுத்தி வாங்குவதால் கிடைக்கும் நன்மை மனநிறைவாகவும், பிறர் மத்தியில் மரியாதையாகவும் இருக்கும் என்பதைத் தாண்டி உங்கள் வருமானத்திற்குப் பொருந்தாத பொருட்களைக் கடன் மூலமாகவேனும் வாங்கிப் பயன்படுத்தும் அளவிற்கு இந்தச் சமூகம் உங்களைத் தள்ளியிருக்கிறதென்றால் உங்கள் வாழ்க்கை முறை எந்த அளவில் உள்ளதென்பதைத்தான் யோசிக்க வேண்டும். கடனால் வரும் மனச்சுமையைக் காட்டிலும் இந்தப் பெருமை அவ்வளவு பெரியதா? உங்கள் வாழ்க்கை வளமாக இருப்பதைச் சமூகத்தில் காட்ட வேண்டிய தேவையும் இல்லை அப்படியே காட்டுவதானால் அதற்கு வேறு வழிகளும் உள்ளன.

இது ஒருவிதமான உளநிலைக் குறைபாடென்றே கூறுவேன். தம்மிடம் இல்லாதவொன்றை இருப்பதாகக் காட்டிப் பெருமை தேட நினைப்பதோ அல்லது தாம் உயர் வாழ்க்கை வாழ்கிறோம் எனத் தம்மையோ நம்ப வைப்பதாகும்.

சின்னங்கள் பொறித்த பொருட்களால் உண்மை வாழ்வைத் தொலைப்பதைக் காட்டிலும் உள்ளதில் பெருமை கொள்வதே உவப்பானதாகும்.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மூளைப்பதிவுகளைக் கழுவித்.....

**நிரை இவண் தந்து, நடுகல் ஆகிய**
**வென் வேல் விடலை இன்மையின் புலம்பி**
**கொய்ம் மழித் தலையொடு**
**கைம்மையுறக் கலங்கிய**
**கழி கல மகளூஉப் போலப்**
**புல்லென்றனையால், பல் அணி இழந்தே**

என்று வழக்கத்தில் இருந்த கணவனை இழந்த பெண் மொட்டையடித்து அணிகலன்களையும் துறக்கும் நிலையானது இன்று எங்கே சென்றது? பொட்டிழந்து, பூவிழந்து போன பெண்கள் இன்று எங்கே? காலமும் சூழ்நிலையும் தன்னுடைய வசதிக்கேற்ப மாறுகின்ற போது சடங்கு சம்பிரதாயங்களும் மாறுகின்றன. எனவே மாற்றங்கள் மனிதனுக்கு வேண்டுமானால், ஆரோக்கியமான மாற்றங்களாக அவை அமைய வேண்டியது அவசியம். சிந்திக்கும் திறனாலே செய்கின்ற காரியங்களை மாற்றியமைத்து அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதில் பாரிய பொறுப்புப் பெண்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. அதற்கு அனைவருக்கும் தத்துவ நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் போன்ற பரந்துபட்ட வாசிப்பு இருக்க வேண்டியது அவசியம்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ட்ரேண்டாகும் விவாகரத்துகள்....

என்னவென்று கண்டறிந்து அதற்கேற்ப அறிவுரை வழங்கி முளையிலேயே பிரச்னையைக் கிள்ளி எறிந்தனர். ஆனால் இன்றைய தனிக்குடித்தனத்தில் பிரச்னைகளைப் பகிர்ந்து கொள்ள ஆட்களின்றி எது சீரியஸான பிரச்னை? எது சாதாரணமான பிரச்னை? என்று பிரித்துக் கண்டறிய முடியாமல்,சிறிய விஷயங்களைக் கூட பூதக் கண்ணாடி வைத்துப் பெரிதாக்கி பிரிந்து



போய்விடுவதுண்டு. இதில் இன்னொன்றினையும் கவனத்தில்கொள்ள வேண்டும் ஒரு உறவில் இருந்து பிரிந்து செல்வதால் எதையெல்லாம் இழக்கின்றோம் எதையெல்லாம் பெறுகின்றோம் என்பது மிக அவசியம். பிரிவதால் பாதிப்புதான் அதிகம் என்றால் அந்த முடிவினை தள்ளிப்போடுவது நல்லது.

குழந்தைகள் இருந்தும் கூட பிரியவேண்டிய கட்டாயத்தில் சிலர் இருக்கக்கூடும், அவர்கள் நிச்சயம் குழந்தை களின் எதிர் காலம் மற்றும் பாதுகாப்பு குறித்து சிந்தித்து செயற்படுவது அவசியம். மனித நாகரீகத்தின் முக்கிய அடையாளம் “குடும்பம்“ எனும் அமைப்பு. குடும்பம்தான் இன்றைய சமூக அமைப்பின் அடிப்படை அலகு.

ஆகவே, அற்ப காரணங்களுக்காக அந்த அமைப்பினை சிதைத்துக்கொண்டு வெளியேறாமல் இருப்பது மனித சமூகத்திற்கு நன்மையையே பயக்கும்!











# யேர்மனியில் மிகச் சிறப்பாக இடம்பெற்ற ஜனகன் மதனமோகனின் மிருதங்க அரங்கேற்றம்

கடந்த 30 ஆண்டுகளாக கலைப் பணி ஆற்றி வரும் எசன் நுண்கலைக் கல்லூரியின், மிருதங்க ஆசிரியர், மிரு தங்கக்கலாஜோதி மிருதங்க கலாஞான வாரிதி திரு.அனுஷாந்த் நயினை விஜயன் அவர்களின் மாணவனும்,யேர்மனி லிவ குஷன், திரு.திருமதி.மதனமோகன் அவர்களின் புதல்வனுமான ஜனகன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த 27.4.2024 அன்று வூப்பெற்றால் நகரில், வூப்பர் கலையரங்கில் சிறப்பாக நடந்தேறியது. மிருதங்க வித்துவான் சங்கீதரத்னம் ச.பிரணவநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழகத்திலிருந்து மிருதங்கக்கலாநிதி நீலமணி இராமகிரு ஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். தமிழகத்திலிருந்து பிரபல பாடகர் சூரியப்பி ரகாஷ் அவர்கள் தனது சிறப்பான இனிமை யான குரலால் சபையோரை கட்டிப்போட்டார் என்றே சொல்லவேண்டும்.

அவருடைய பாடல்களுக்கு ஜனகன் சிறப்பாக,தாள சுத்தியோடு வாசித்து பாராட்டுக்களை அள்ளிக்கொண்டார். அவருக்கான மிரு தங்க இசைக்கலை மணி சான்றிதழை யேர்மனி அரச நுண் கலைப்பீட அதி பர் திருமதி.வலன்ரீனா அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





சிறப்பு விருந்தினர்களாக யேர்மனி தமிழ ருவி வானொலி இயக்குனர் தமிழவேள் நயினை விஜயன்,சுவிஸ்நாட்டிலிருந்து மிருதங்க வித்துவான் விவேகானந்தன், மற்றும் லண்டன் ரைம் வானொலி, பாமுகம் இயக்குனர் திரு.நடாமோகன் ஆகியோர் கலந்து சிறப்பித்து வாழ்த்தினர்.

**மணிபல்லவன்**

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இறந்த தம் மூதாதையருடன்

அண்மையில் இறந்துபோன இந்தச் சாந்த லிங்கத்திற்கு 14 பிள்ளைகள். அப் பதினாங்கு பிள்ளைகளில் ஒரு பிள்ளைதான் இப்போது உருக்கொண்டு ஆடிக்கொண்டிருக்கும் பொன்னி. எனக்கு இது பெரும் ஆச்சரியமா கவும் வினோதமாகவும் இருந்தது. பண்டைக் காலத்தில் இருந்த கழுவன் அவனது மனைவி, இடையில் தலைவனாக இருந்த தேவர் அவரது மனைவி ஆச்சி, பின்னர்கப்புவனாக இருந்த கணபதி அதன் பின்னர் காத்தமுத்து, காத்த முத்துமகன் சாந்தலிங்கம் என பண்டைக் காலம் தொடக்கம் இன்றுவரையான ஒரு குடும்பவரலாறு அங்கு எனக்கு தெரிந்தது.

தமது சமூகத்தின் வரலாற்றை (Family History) சடங்கிலே அவர்கள் இப்படித் தேக்கி வைத்திருந்தனர். மட்டக்களப்பு பூர்வீக சரித்திரத்தில் அல்லது யாழ்ப்பாண வைபவ மாலையில் மஹாவம்சத்தில் எல்லாம் இலங்கையை ஆண்ட மன்னர்கள் பேச படுகின்றனர். அவை ஏட்டிலும் எழுத்திலும் உள்ளன. இந்தச் சடங்கு மூலம் தம் முனோரின் பெயர்கள் நினைவுகூரப்படும் இம்மரபு அந்த மரபுகளுக்குச் சற்றும் குறைந்தது அல்ல அதே செயல்,இங்கு சடங்கில் நிக ழ்கிறது. அவ்வளவுதான் சடங்கை வாசிக்க நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்,முன்னர் சொன்ன அந்தச் சாந்தலிங்கம் இறந்தது வடிசராயம் குடித்து. அதனால் மனைவி இராசம்மாவுடன் தகராறு. இருவரும் சாந்த லிங்கபேசுவதில்லை. சாந்தலிங்க இறக்கும் போதும் இராசம்மா அவருடன் பேசவில்லை யாம்.

அன்று தோன்றிய இறந்த ஆத்மா சாந்தலிங்கம் முதலில்கேட்டது மனைவி இராசம்மாவைத்தான். அக் கிழ மூதாட்டியோ கணவன் முகம்பார்க்க மறுத்துவிட்டாள். அனைவரும் சமாதானம் கூறி இராசம்மா வையும் பொன்னியின் உடலில் புகுந்து நண்பர்களோடு கதைத்த சாந்தலிங்கத்தை யும் உரையாட விட்டனர். இது ஒரு உள நோய்ச் சிகிச்சைமுறை போல எனக்குப்பட்டது. இதற்குள் இரண்டு விடயங்கள் மேற்கிளம்பு கின்றன ஒன்று புரதான இனக்குழுவின்ஒரு விரிவான தொடர்ச்சியான வரலாறு, அடு த்து அது அவர்களுக்கு வாழும் நம்பி க்கையையும் உள நோய்ச் சிகிச்யையும் அளிக்கும் முறைஅவ்வரலாற்றை அவர்கள் தம் நினைவுகளில்தேக்கி வைத்துள்ளனர். கல்வெட்டையும், புதைபொருளையும்தேடி த்தேடிக் பூதக்கண்ணாடி கொண்டுதிரியும் தொல்பொருள் ஆய்வாளர்களும், வரலா ற்றாசிரியர்களும் மனித மனதில் ஆழ்ந்து புதைந்துள்ள இந்த நினைவுகளை கணக்கில் எடுப்பதில்லை. எடுத்தால் ஒரு பெரும் பழைய சமூக வரலாறு பண்பாடு கிடைக்கும் அல்லவா?

கிழக்குப்பல்கலைக்கழகம் ஒரு பேராசிரியர் தலைமையில் அண்மையில் கி.மு 2ம்நூ ற்றாண்டுக்குரிய கல்வெட்டு களையும், புதை பொருள் ஆய்வுகளையும் மட்டக்களப்பில் பலத்த பிரயாசத்தின் பின் கண்டெடுத்தனர். அதனடியாக அம்மக்கள் நாகர் என இனம் கண்டனர். நாகரே இரும்புப் பாவனையையும் வேளாண்மையையும் மட்டக்களப்புக்குக் கொணர்ந்தனர் என நிறுவினர். மட்டக்கள ப்பு வரலாறு நாகருடன் ஆரம்பிக்கிறது. ஏன நிரூபித்தனர் பெரும் பெரும் நூல்களை எழுதினர்.

அவர்கள் உழைப்பும் தேடலும் மிகுந்த வரவேற்பிற்குரிய துதான், எனினும் நாக ருக்கமுந்தியவரான இயக்கர் வழிவந்த பழங் குடியினரான வேடர் குலம் கல்வெட்டு, புதை பொருள், எழுத்துசான்றுகளின்றி தம் வரலா ற்றைத் தம் நினைவுகளிலும் சடங்குகளிலும் பதித்து வைத்துள்ளதைக் கவனிக்கத்தவறி விட்டனர். இது அவர்களின் பிழையன்று அவர்களின் முறையியல் அவர்களை அப்படி வழி நடத்தியது. அவர்கள் வெளிச்சத்திலே தான் தேடினார்கள் இருட்டுக்குள் தேட வில்லை. மட்டக்களப்பின் பூர்வீக வரலாறு இருட்டுக்குள் கிடக்கிறது. ஆய்வாளர்களோ வெளிச்சத்தில் தேடுகிறார்கள்.இதைத்தான் தொலைத்த இடத்தில் தேடுவோம் எனநான் குறிப்பிட்டேன். இன்னும் வரும்.





M&M FAMILY
TOGETHER WE SHALL PREVAIL

வெற்றிமணியின் 30 ஆவது ஆண்டு நிறைவு இதழ் கண்டு மகிழ்கின்றோம்.

30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்



# நாம் வாழ்ந்த காலத்தின் கண்ணாடி பாதியூர் பறிபோன குரும்பசிட்டி

குரும்பசிட்டி பாலபோதினி இலக்கிய மஞ்சரி என பல பாடநூல்கள் தந்த ஒரு இலக்கியப்பரப்பு. இப்போ பாதியூர் இராணுவத்திடம் பறிபோன ஊர். எனவே அடிக்கடி பேசப்பட வேண்டிய ஊராக உள்ளது குரும்பசிட்டி. சாதாரண மனிதர்களின் சரித்திரம் பேசப்பட வேண்டும்.

குரும்பசிட்டி முன்னாள், அஞ்சலக உப அதிபர் Post office பேபி அவர்களுக்கு வெற்றிமணி யின் இதய அஞ்சலி!

ஒரு காலத்தில் கண்கண்ட தெய்வமாக, ஆலயமாக இருந்தது என்றால், அதற்கு ஈடாக, எல்லா ஊரிலும் தபால் கந்தோர்கள் (அஞ்சலகம்) அமைந்து இருந்தது எனலாம்.

## கண்ணன்

நல்ல செய்தியோ, துயரச் செய்தியோ, எதுவானாலும் அதனை எடுத்து சென்று உரியவர் கரங்களில் ஒப்படைக்கும் பெரும் பணி இக்கந்தோருக்கு உண்டு. பிள்ளைகள் பெற்றோருக்கும், தங்கள் குடும்பத்திற்கும், அனுப்பும் மணிஓடர். அவர்கையில் சேர்க்கும் அரும்பணி.

காதலர்களின் உயிர்நாடி கடிதங்கள். அதனை சுமந்துவரும் சுகமான வேலை அவர்களது.பிள்ளையின் கடிதம் கையில் கிடைத்ததும் தாயின் மலர்ந்த முகத்தை உலகில் எதனுடனும் ஒப்பிட முடியாது. இன்று உள்ள இளம் சந்ததிக்கு இவை பற்றி அதிகம் தெரியாது. அதனால் மேல் சில குறிப்புகள் எழுதி. தொடர்கிறேன்.

யாழ்ப்பாணம், குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மாணிக்கவாசகர் (பேபி),முன்னாள் உப தபாலதிபர், குரும்பசிட்டி அவர்கள்- 07-05-2024- செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

Post office Baby என குரும்பசிட்டி அன்பாக அழைக்கப்பட்டவர், திருமதி. மகேஸ்வரி மாணிக்க வாசகர்.ஊரில் கோவில் வாசல் மிதிக்காதவர்கள் இருப்பது இல்லை. அது போல் தபால் கந்தோர்கள் மிதியாதவர் எவரும் இல்லை.

தபால் கந்தோரில் கடிதம் அனுப்பும்போது யன்னல் ஊடக தெரியும் பேபி அவர்களின் முகம், ஒவ்வொருவருக்கும் தாங்கள் அனுப்பும் கடிதங்களில் உள்ள முகங்களின் முகவரி போல் அன்பான, முகம் தெரியும். அந்தளவு முகம் எல்லோருக்கும் பிடித்த முகம். உரில் ஒரு தபால் கந்தோர் என்றால் கடிதம் சேரும் இடமும், அது எங்கிருந்து போகிறது என்பதும் தெரியும்,வேலை, நேர்முக பரீட்சை, இவற்றின் முடிவுகள், இன்னும் பல செய்திகள், தந்திமூலம் வந்து சேரும்.இமெயில், வட்சப்,வைபர், என்பன அன்று இல்லை.

முக்கிய செய்திகள் யாவும் த. கந்தோர் மூலமாகவே வந்து சேரும். வெளியிடங்களுக்கு, தொடர்பாடல் மேற்கொள்ள எமது ஊரில் சிறந்த பணியினை செய்த தபால் கந்தோரின் உப தபால் அதிபராக இருந்து சேவை செய்தவர். Postoffice பேபி அவர்கள். ஒருவர் தனது வேலையை, கடமை, கண்ணியத்துடன் செய்தால் போதும், வேறு தனியாக ஒரு தொண்டு செய்யவேண்டியது இல்லை. தனது வாழ்நாளில் அன்புடன் பெரும் பணி செய்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

**அன்னாருக்கு, வெற்றிமணி பத்திரிகையின், அஞ்சலி.**





# குரும்பசிட்டி சந்திரமணிதேவி முத்துலிங்கம் (தேவி) அவர்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி

“ஊருக்கு உளைத்திடல் யோகம்“ என்ற ஆன்றோரின் வாக்கிற்கிணங்க மகத்தான வாழ்க்கையை வாழ்ந்து மருத்துவ சேவையால் தன்னை சுற்றியுள்ளவர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்த அமரர் திருமதி.சந்திரமணிதேவி முத்து லிங்கம் அவர்களின் முதலாமாண்டு நினைவு தினம் இன்றாகும். (04-07-2024) ஊரிலே நாம் சிறுவர்களாக இருந்காலத்தில், தேவி அக்கா என அவரை அன்புடன் அழைப்போம், அவர்களின் கனிவான பேச்சு இன்றும் காதுகளில் ஒலிக்கிறது. தேவி அக்கா இணுவில் பரியாரியின் மகள். சிறுவயதில் சின்னச் சின்ன வருத்தம் வந்தால் ஓடிப்போய் மருந்துக்கு தேவி அக்காவின் தந்தையிடம் செல்வோம்.

அவர் சாமி கும்பிட்டு யோகாசனம் செய்து எம்மிடம் வரும் வரை, தேவி அக்கா எம்முடன் அன்பாக கதைப்பார்கள்.

பின் தகப்பனார் வந்து நாடிபிடித்து பார்த்து, குளிசைகள் தருவார்.அவற்றை உண்டே அன்று எமது ஊர்மக்களும் நலமா வாழ்ந்தார்கள். இயற்கை மருத்துவம் இன்று பெரிதாக பேசப்படுகிறது, அன்று நாம் இயற்கை வாழ்வையே கடைப்பிடித்தோம். நான் பெரியதகப்பனார் வீட்டில் இருந்தே படித்தேன். எமது வீட்டில் இருந்து தேவியக்கா வீடு கூப்பிடு தூரம். மருந்து தந்தாரா, என பெரியம்மா கேட்டால், தேவி அக்கா நின்றவ அவவுடன் கதைக்கும் பொழுதே வருத்தம் பாதி சுகம் என்பேன். அவரின் கனிவான பேச்சுக்கு ஏற்ப மருத்துவ தாதியாக பின்னர் வேலை செய்தார்.தாதி உடை தேவியக்காவின்



கனிவான முகத்திற்கு அழகாக இருக்கும். இப்போது நினைத்து பார்த்தால் அன்னை தெரேசா ஞாபகம் வருகிறது. தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் உளநல மருத்துவ பணியில் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. யாழ்பாணம் மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளிலும் அவர் கடமையாற்றியிருந்தார். ஓய்வு பெற்ற பின்னும் அவர் தான் மறையும் வரை பலருக்கும் தன்னலம் கருதாது ஒரு தாயை போல உதவினார்.

-மு.க.சு.சிவகுமாரன்
“வெற்றிமணி” ஆசிரியர்


DEVI FUNERAL SERVICE
Devi-Bestattungen

உறவுகள் பிரியும் போது
கவலைகளை சுமக்கின்றோம்

OPEN 24 HOURS
7 DAYS

எமது சேவைகள்

- உலகெங்கும் அனுப்பிவைத்தல்
- எரிக்கும் இறுதிச்சடங்குகள்
- நிலத்தில் தாக்கும் சடங்குகள்
- விசேட இறுதிச்சடங்கு வகைகள்
- சமூகப்பணத்துடனான இறுதிச்சடங்குகள்
- நாங்கள் ஈமைக்கிரியை சேவைகளை உங்களுக்கு அண்மையாக உள்ள இடத்திலிருந்தும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் வழங்குவோம்

devi-bestattungen.de
info@devi-bestattungen.de
01575 4292746



OPEN 24 HOURS 7 DAYS
ALL RELIGION RESPECTED

# சம்யுக்தாவின் சங்கடம்



வாத்தி படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடித்து, அதில் இடம் பெற்ற 'அடியாத்தி' என்ற பாடலின் மூலம் இன்னும் அதிக அளவில் தமிழ் தெலுங்கு ரசிகர்களிடம் பிரபலமானவர் மலையாள நடிகை சம்யுக்தா.

அய்யப்பனும் கோஷியும் படம் தெலுங்கில் ரீமேக்கான போது அந்த படத்தில் நடிகர் ராணாவுக்கு ஜோடியாக நடித்து தெலுங்கில் நுழைந்தார் சம்யுக்தா. அதன் பிறகு பிம்பிசாரா, வாத்தி, விருபாக்ஷா உள்ளிட்ட சில படங்களில் நடித்தார். தற்போது சுயம்பு என்கிற தெலுங்கு படத்தில் நடித்து வருகிறார் சம்யுக்தா. சமீபத்திய பேட்டி ஒன்றில் அவர் கூறும் போது, தெலுங்கில் நடிப்பதில் எனக்கு மிகமிக சிரமமாக இருப்பது ஓவர் மேக்கப் போட்டுக் கொள்வது தான். மலையாளத்தில் நடிக்கும் போது மேக்கப் போடுவதற்கான வேலையே இருக்காது.

இயல்பாக வீட்டில் இருந்து அலுவலகம் கிளம்பி செல்வதற்கு என்ன மேக்கப் போட்டுக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு தான் வேலை இருக்கும். ஆனால் தெலுங்கு படப்பிடிப்பில் மேக்கப் என்பது தனி வேலையாகவே இருக்கிறது என்று கூறியுள்ளார் சம்யுக்தா.

# நாம் போராட வேண்டும்

நடிகை சமந்தா சமந்தா, தனது திரைத்துறைப் பயணம் குறித்து நெகிழ்ச்சியாகப் பேசியதாவது: என்னுடைய குழந்தைப் பருவத்தில் நான் சொகுசாக இருந்ததில்லை, நிறைய கஷ்டங்களைப் பார்த்துதான் வளர்ந்தேன்.

அதனால், எப்படியாவது வாழ்க்கையில் சாதித்துவிட வேண்டும் என்பதில்தான் என் முழு கவனமும் இருந்தது. என்னை நானே ஊக்கப்படுத்திக் கொள்வேன், கடுமையாக உழைக்க வேண்டும் என்பதை எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். என்னுடைய 22-23 வயதில் திரைத்துறையில் காலடி எடுத்து வைத்தேன். அந்த சமயத்தில் இந்தத் துறை பற்றியெல்லாம் பெரிதாக ஏதும் தெரியாது. கடுமையாக உழைக்க வேண்டும்,

எப்படியாவது சாதித்துவிட வேண்டும் என்பது மட்டும் தான் மனதில் இருந்தது. திரைத்துறையில் ஒரு நல்ல நிலையை அடைந்த பிறகு அதைத் தக்க வைக்க இன்னும் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. நாம் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்க வேண்டும், போராட்டமும், உழைப்பும் மட்டுமே என்றும் நிலையானது.



# கார்த்தியின் 'மெய்யழகன்'



கார்த்தி நடித்துள்ள 'மெய்யழகன்' படத்தில் வில்லனாக அரவிந்த் சாமியுடன் முக்கிய கதாபாத்திரங்களில் ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண் ஆகியோரும் நடித்து வருகிறார்கள். இதன் படப்பிடிப்பு கும்பகோணத்தில் தொடங்கி, அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒரே வீச்சில் நடந்து முடிந்திருக்கிறது.

'96' பிரேம்குமார் இயக்கியுள்ள இப்படம், உணர்வுப்பூர்வமான ஒரு கதையாக உருவாகியிருக்கிறது.



# அக்காவாக 20 கோடி

நயன்தாரா கதையின் நாயகியாக நடித்து வந்த மண்ணாங்கட்டி சின்ஸ் 1960 என்ற படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் முடிவடைந்தது. இதையடுத்து அவர் நிவின் பாலியுடன் டியர் ஸ்டூடன்ஸ் என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கன்னட நடிகர் யஷ் நடிப்பில் கீது மோகன்தாஸ் இயக்கும் டாக்ஸிக் என்ற படத்தில் நடிப்பதற்கு நயன்தாராவிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ஆனால் இந்த படத்தில் யஷ்க்கு ஜோடியாக இல்லாமல், அக்கா வேடத்தில் நடிக்க நயன்தாராவை அணுகியுள்ளார்களாம்.

இதையடுத்து அக்கா வேடம் என்பதால் தனக்கு 20 கோடி சம்பளம் தர வேண்டும் என்று நயன்தாரா கூறி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது .







30 ஆண்டுகள் கடந்த வெற்றிமணிக்கு எமது வாழ்த்துகள்


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டுச் சேலைகளுக்கும், பஞ்சாபிகள், குருத்தாக்கள், பாட்டிசாறிகள், மற்றும் இமிரேசன் நகைகளுக்கும், நிறைவான தெரிவுகளில் எம்மிடம் கிடைக்கும்
" என்றும் புதியது ஆடைகள் என்றும் புதியது ! "
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Ludwig str.87a
70197
Stuttgart
Stuttgart நகரில்...
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்முண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 / 0231 5898 1815 / 0231 5898 6470


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Raheena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698